வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 06.10.2023 வெள்ளிக்கிழமை இதழ் : 300 பக்கங்கள் : 16

மாருதி Money Exchange (Pvt) Ltd.
T.P: 021 221 4433
076 284 4443
T.P: 011 236 2086
MoneyGram
Ria MONEY TRANSFER
WESTERN UNION

## ஐ. எம். எவ். கடன் இலங்கைக்கு கிடைப்பதற்கு சீனாவே தடை!

ரோக்கியோ, ஒக். 06

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிவாரணம் கிடைப்பதற்கு சீனா தடையாக உள்ளது. இலங்கைக்கு மிகத் தேவையாக உள்ள 300 கோடி டொலர் கிடைப்பனவை சீனா தடுக்கிறது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன், வலுவான கடன் நிவாரண கட்டமைப்பைப் பெறும் விடயத்தில் இலங்கை தனக்கு அதிக கடன்களை வழங்கிய நாட்டிடமிருந்து - சீனாவிடமிருந்து பெரும் சவாலை எதிர்கொள்கின்றது என்று ஜப்பானின் பிரபலமான நாளிதழான ஏசியன் நிக்கெய் ரிவியு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் நெருக்கடியிலிருந்து மீண்டுகொண்டிருக்கும் நாட்டுக்கு சென்ற வேளை அது அந்த நாட்டிற்கு ஒரு நம்பிக்கையான விடயமாக காணப் பட்டது. எனினும் இரு தரப்பு கடன் கொடுப்பனவு 11

## நீதி உடைந்த இலங்கைக்கு நிதி; அநீதியையே மேலோங்க செய்யும்

### ஜெனிவாவில் கஜேந்திரகுமார் எம். பி.

ஜெனிவா, ஒக். 06

சரியான சீர்திருத்தங்களை வலியுறுத்தாமல், உடைந்த நீதி நிர்வாக முறைமை கொண்ட இலங்கையைப் போன்ற ஒரு நாட்டுக்கு நிதியளிப்பது நிறுவன மயப்பட்ட அநீதியை நிலைநாட்டுவதாகவே அமையும் - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந் திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் 11



# நாகபட்டினம் - காங்கேசன்துறை கப்பல் சேவை இன்று ஆரம்பம்!

சென்னை, ஒக்ரோபர் 06

**தமிழ்நாடு நாகபட்டினத்தில் இருந்து காங்கேசன்துறை துறை முகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து இன்று ஆரம்பமாகிறது. இதேநேரம், நாகபட்டினத்தில் இருந்து காங்கேசன்துறை புறப் படவுள்ள கப்பல் நேற்றுமுன்தினம் இரவு கேரளாவின் கொச்சி துறைமுகத்தில் இருந்து புறப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.**

நாகபட்டினத்தில் இருந்து இன்று ஆரம்பமாகும் கப்பல் பயணம் சோதனை முறை ஓட்டம் என்றும் துறைமுக கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததும் ஜனவரி மாதம் முதல் உத்தியோகபூர்வமாக கப்பல் பயணமாகும் என்று தமிழ் நாட்டின் நெடுஞ் சாலைகள் மற்றும் 11

## உணவுகளின் விலை உயர்வு!

கொழும்பு, ஒக். 06

மதிய உணவு பொதி, கொத்து ரொட்டி, தேநீர் என்பவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மதிய உணவு பொதியின் விலை 50 ரூபாயாலும் கொத்து ரொட்டியின் விலை 20 ரூபாயாலும் தேநீரின் விலை 10 ரூபாயாலும் அதிகரிக்கப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட் டது.

நேற்றுமுன்தினம் சமையல் வாயுவின் விலை 463 ரூபாயால் உயர்த்தப்பட்டது. இதையடுத்தே உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப் பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வரிகள் அதிகரிக்கும் சாத்தியம் பொருட்களும் விலை உயரும்!

கொழும்பு, ஒக். 06

நிதி அமைச்சு சில வரிகளை அதிகரிக்கலாம் என்பதால் சில பொருட்களின் விலைகளும் அதிகரிக்கலாம் என்று மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், "சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை குறித்த ஆய்வு ஒக்ரோபர் மாதத்துக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கிறோம். கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் அதற்கு சமாந்திரமாக இடம்பெறும். கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியா, பாரிஸ் கிளப், சீனா ஆகிய நாடுகள் பெரும் ஆதரவை வழங்கியுள்ளன 11

## தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை விரைவில் ஆரம்பம்!

கொழும்பு, ஒக். 06

"தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை நடத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இந்திய பயணத்தின்போது அந் நாட்டு துறைமுக அதிகாரிகளுடனும் இது தொடர்பில் கலந்துரையாட நடவடிக்கை எடுப்பேன்", என்று துறை முகங்கள் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை பாராளுமன்ற அமர்வில் ரிஷாத் பதியுதீன் எம். பி., தலைமன்னார் - இராமேஸ்வரத்துக்கு இடையிலான கப்பல் சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அண்மையில், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் 11

## 2024 பட்ஜெட்டுக்கு நிதி ஒதுக்கீடு; வடக்கு அபிவிருத்திக்கு ரூ. 451 கோடி!

கொழும்பு, ஒக். 06

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்துக்கு அரசாங்கம் 3 இலட்சத்து 86 ஆயிரத்து 84 கோடியே 67 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாயை ஒதுக்கியுள்ளது. இதில், வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு 451 கோடியே 50 இலட்சம் ரூபாயும், கிழக்கு மாகா ணத்துக்கு 522 கோடியே 50 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்தவால் சமர்ப் பிக்கப்பட்டது. 11

## நாட்டை கட்டியெழுப்புவதற்கு இணைந்து செயல்பட வாருங்கள்!

### எதிர்கட்சிகளுக்கு ரணில் அழைப்பு

கொழும்பு, ஒக். 06

எமது நாடு தற்போது நெருக்கடியான நிலைமையில் இருக்கின்றது. நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களில் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற முன்வாருங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிகளுக்கு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

நான் சரியென்று இரண்டு பக்கங்களில் உள்ளவர்க ளும் கூறுகின்றனர். அப்படியென்றால் இரண்டு பக்கத்தில் உள்ளவர்களும் 11

## கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வுக்கான நிதி கையிருப்பில்

### முல்லைத்தீவு மாவட்ட செயலகம்

முல்லைத்தீவு, ஒக். 06

முல்லைத்தீவு மனித புதைகுழி அகழ்வுக்கு ஒதுக்கப்பட்ட நிதி இன்னும் கையிருப்பில் இருக்கிறது என்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், முன்னர் ஒதுக்கிய 56 இலட்சம் ரூபாயில் இன்னும் ஒரு வார காலத்துக்கு அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. நீதிமன்றத்தின் தீர்மானத்துடன் தொடர்ந்தும் அகழ்வை முன்னெடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. 11

## கடன் வட்டியை குறைக்க மத்திய வங்கி நடவடிக்கை

கொழும்பு, ஒக். 06

இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை மேலும் ஒரு வீதத்தால் குறைத்துள்ளது. சந்தை வட்டி வீதத்தை தீர்மானிக்கும் வகையில், மத்திய வங்கியால் கொள்கை வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையை தளர்த்திய பல சந்தர்ப்பங்களில் கொள்கை வட்டி வீதங்களை குறைத்துள்ளது.

இந்த நிலையில், கொள்கை வட்டி வீதங்கள் குறைக் கப்பட்டமையால் சந்தையில் கடன் வட்டி வீதங்கள் விரைவில் குறைவடையும் என்று 11

# இப்படியும் நடக்கிறது

ஜேர்மனியின் டி. டபிள்யூ (DW) சனலுக்கு அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பேட்டி ஒன்று பற்றியே கடந்த சில நாட்களாக பலரும் தமது கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அதுவும் அரசியல் நிகழ்ச்சிகளில் கேள்வி கேட்பவர்கள் தங்களை எல்லாம் தெரிந்தவர்கள் போல காட்டிக்கொள்ளவேண்டும். அப்போதுதான் பதில் சொல்பவரும் சற்று நிதானமாகப் பதில் சொல்வார்.

அதற்காக கேள்வி கேட்பவர் தன்னை எதிரே இருப்பவரைவிட உயர்ந்தவராகக் கணித்துவிட்டால் அது தலைகீழாக மாறிவிடும்.

சர்ச்சைக்குரிய அந்தப் பேட்டியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மிக நிதானமாகவும் அதேவேளை மிகத் தெளிவாகவும் ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளித்துக் கொண்டிருந்தமையை பேட்டியின் ஆரம்பத்தில் கவனிக்க முடிந்தது.

அதற்கு முன்னதாக - அதாவது ஜேர்மனியின் பெர்லின் நகரத்தில் நடைபெற்ற 'பெர்லின் டயலொக்' என்ற சர்வதேச மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்கவே மாநாட்டின் தொடக்க உரையை ஆற்றியிருந்தார். அதுகூட அவருக்கான சர்வதேசத்தின் கவனம் குறித்த கருத்தை புலப்படுத்தியிருந்தது.

அந்த மாநாட்டில் அவர் ஆற்றிய அந்தத் தொடக்கவுரை பற்றி மறுநாள் ஜேர்மனிய பத்திரிகைகள் மிக முக்கியத்துவமளித்து அந்தப் பேச்சை விதந்துரைத்திருந்ததாக அங்கிருந்து நண்பர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை 'டொச்ச வெல' என்ற டி. டபிள்யூ சனல் பேட்டி கண்டிருந்தது. அந்தப் பேட்டியில் நான் முதலில் சொல்லியது போல ஆரம்பத்தில் மிக அமைதியாக ஆனால், ஒவ்வொரு கேள்விக்கும் தெளிவாக பதிலளித்துக்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பேட்டியாளர், சனல் 4 அண்மையில் வெளியிட்ட ஆவணப்படம் குறித்து கேட்டதும் சிறிது ஆத்திரமடைந்ததைக் காணமுடிந்தது.

சனல் 4 என்பது பிரிட்டனின் ஒரு சிறிய தொலைக்காட்சி சேவை. 'டொச்ச வெல'வுடன் ஒப்பிடும்போது அது ஒரு மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசமுள்ள தொலைக்காட்சி. அப்படியிருக்கையில் ஒரு பிரபல்யமான தொலைக்காட்சி ஒன்றுக்காக பேட்டி எடுக்கின்ற ஒருவர், ஓர் அநாமதேய தொலைக்கட்சி போன்ற ஒரு சிறிய தொலைக்காட்சியின் ஆவணப்படத்தை சாட்சிக்கு அழைத்துக்கொண்டு கேள்வி கேட்டதே தவறான முன் உதாரணமானது. இதுவே, அவரை கோபப்படுத்தியிருக்க வேண்டும். அதைவிட தாம் முன்வைத்த பாரதூரமான ஒரு குற்றச்சாட்டு குறித்து தம்மிடமே எந்த ஆதாரமும் இல்லை என்று சொன்ன ஒரு தொலைக்காட்சி பற்றியும் அதன் தகவல் பற்றியும் இவர் கேள்வி கேட்டிருக்கவே தேவையில்லை.

அப்படிக் கேட்கவேண்டும் என்றால்கூட, சனல் 4இன் பெயரை பயன்படுத்தாமலே ஈஸ்டர் தாக்குதல் குறித்து அண்மையில் புதிதாக முன்வைக்கப்பட்டிருக்கும் புகார்கள் குறித்து என்ன நினைக்கின்றீர்கள் என்றாவது கேட்டிருக்கலாம்.

ஆனால், அவர் எடுத்த எடுப்பில் சனல் 4இல் தெரிவிக்கப்பட்டிருக்கும் புகார் குறித்து என்று தொடங்கியதும் ரணில் வழக்கத்துக்கு மாறாக பொங்கி எழுந்ததைக் காணமுடிந்தது.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து அமெரிக்காவின் எவ். பி. ஐ. (புலன் விசாரணை கூட்டாட்சி பணியகம்) ஏற்கனவே விசாரணை நடத்தியிருந்தது. அதுமாத்திரமன்றி, இந்திய உளவுத்துறை, பிரிட்டனின் உளவுத்துறை, அவுஸ்திரேலிய உளவுத்துறை, சீன உளவு அமைப்பு என்பவற்றின் உதவியுடனேயே ஏற்கனவே விசாரணைகள் நடைபெற்றன. இந்த நிலையில் மீண்டும் ஒரு சர்வதேச விசாரணை அவசியமற்றது என்று தெரிவித்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ. நா. மனிதஉரிமை பேரவை பற்றியும் காட்டமான கருத்துகளை முன்வைத்தார்.

அதுமாத்திரமன்றி, மேற்குலகு மீதும் அவர் கடும் விமர்சனத்தை முன்வைத்தார். இந்த விமர்சனங்களை கவனித்த நண்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு, அந்தப் பேட்டியில் ரணில் தெரிவித்த கருத்துகள் பற்றி நீண்டநேரம் விவாதித்தார்.

'ரணில் இதுவரை ஒரு மேற்குலகின் ஆள் என்ற விம்பமே இருந்துவருகின்றது. அதனை உடைப்பதற்காகத்தான் அப்படிக் கதைத்தாரோ தெரியவில்லை' என்றார்.

அப்போது நான் சொன்னேன்:

'நீங்கள் எனது நல்ல நண்பர், நான் உங்களை பற்றி மற்றவர்களுடன் என்ன விமர்சித்தாலும் நீங்கள் ஏதோ எனது தேவைக்காகத்தான் அப்படி சொல்லியிருந்தாலும் நான் உங்களைப்பற்றி அல்லது உங்கள் தேவை ஒன்று வரும்போது உங்களுடன்தான் நான் இருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியும்தானே. அதுபோலத்தான் ரணிலின் மேற்குலகு பற்றிய கண்டனமும்' - என்றேன்.

**-ஊர்க்குருவி.**

# நாட்டில் 12.3 மில்லியன் இலங்கையர் ஆபத்தான பொருளாதார நிலையில்!

கொழும்பு, ஒக். 06

இலங்கையில் 12.3 மில்லியன் மக்கள் பொருளாதார அபாய நிலையை எட்டியுள்ளதாக தெரியவந்துள்ளது.

பாராளுமன்ற வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான குழு கூட்டத்திலே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தினால் வெளியிடப்பட்ட தேசிய குடிமக்கள் கணக்கெடுப்பு எனப்படும் பல பரிமாண இடர் குறியீட்டின் அடிப்படையில் கொள்கை அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான குழு நேற்று பாராளுமன்ற வளாகத்தில் அதன் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் கூடியது.

இந்தக் கூட்டத்தின்போதே ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் ஒவ்வொரு 10 பேரில் 6 பேர் அபாயகரமான பொருளாதர நிலையை அடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய 55.7 வீதமானவர்கள் அபாயகரமான பொருளாதர நிலையை எட்டியுள்ளதுடன், இந்த நிலைமையானது கிராமப்புறங்களில் 82 வீதமாக அதிகரித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல், பொருளாதார நெருக்கடி, வரவு-செலவுத் திட்ட பற்றாக்குறை, கொடுப்பனவு சமநிலை நெருக்கடி மற்றும் கடன் பொறுப்புகள் காரணமாக இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பின்னணியில் நாட்டில் 10 பேரில் 6 பேர் அபாய வலயத்தில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இந்த நிலை எதிர்வரும் ஒரு வருடத்தில் 10 பேரில் 8 பேராக அதிகரிக்கலாம் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இந்த நிலையில், பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கான முறையான மற்றும் வலுவான சமூக பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக அவர் வலியுறுத்தினார்.

(அ)

# 2024 நிதியாண்டு ஒதுக்கீட்டு சட்டமூலம் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக். 06

2024 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் பிரகாரம் 2024ஆம் ஆண்டிற்கான மொத்த வரவு - செலவு ரூபா 8 டிரில்லியன் ஆகும்.

2024 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தை பாராளுமன்றில் முன்வைப்பதற்கு கடந்த முதலாம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியது.

2024 ஆம் நிதியாண்டுக் கான அரச செலவீனமாக 3 ஆயிரத்து 860 பில்லியன் ரூபா வாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த தொகையானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 203 பில்லியன் ரூபா அதிகரிப்பாகும்.

அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டில், பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இவ்வமைச்சுகளுக்கு அடுத்தாண்டு 886 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுகளுக்கு கடந்த ஆண்டு 614 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டு 723 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு 423 பில்லியன் ரூபாவும், சுகாதார அமைச்சுக்கு 410 பில்லியன் ரூபாவும், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 403.6 பில்லியன் ரூபாவும், கல்வி அமைச்சுக்கு 237 பில்லியன் ரூபாவும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு 140.7 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சுக்கு 100 பில்லியன் ரூபாவும், நீர்ப்பாசன அமைச்சுக்கு 84 பில்லியன் ரூபாவும், ஜனாதிபதி அலுவலகத்துக்கு 6.6 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மாவட்டத்தில் அதிகரிக்கும் கண் நோய்!

யாழ்ப்பாணம், ஒக். 06

யாழ்ப்பாணத்தில் நிலவி வரும் கடும் காற்றுடனான காலநிலை காரணமாக கண் நோய் பரவி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த கண் நோய் வடமராட்சி, வலிகாமம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியில் வேகமாகப் பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

கண் கடுமையாகச் சிவப்படைதல், கண்ணில் வலி மற்றும் எரிச்சல் ஏற்படுத்தல் இதன் அறிகுறிகள் என பொது சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பொதுமக்கள் இது தொடர்பில் அவதானமாக இருப்பதுடன் மேற்கண்ட அறிகுறிகள் காணப்படும் பட்சத்தில் அருகிலுள்ள வைத்தியசாலைகளை நாடுமாறும் பொது சுகாதார பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் கண்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் சுத்தமான கைக்குட்டையினை பயன்படுத்துமாறும், வெயிலில் செல்வதனைத் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(அ)

# பாடசாலை விடுமுறையில் விரைவில் மாற்றம் வரும்!

கொழும்பு, ஒக். 06

உயர்தர பரீட்சை ஜனவரியில் நடைபெறுவதால் டிசெம்பர் மாத பாடசாலை விடுமுறையில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் பிரகாரம் பாடசாலை தவணை விடுமுறை டிசெம்பர் 22ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை உயர்தரப் பரீட்சை தொடர்பில் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உயர்தர பரீட்சை நாள் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. ஜனவரி 4 முதல் 31 ஆம் திகதி வரையில் பரீட்சை நடக்கவுள்ளது. இதன்படி யாரேனும் விண்ணப்பிக்க இருந்தால் அவர்களுக்கு 3 நாட்கள் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளன. இணையவழி மூலம் விண்ணப்பிக்க முடியும். பரீட்சை தொடர்பான கால அட்டவணை அடுத்த வாரமளவில் வெளியிடப்படும்.

அத்துடன் பாடசாலை விடுமுறை இம்முறை டிசெம்பர் 22ஆம் திகதியளவில் வழங்கப்படலாம். ஆரம்ப பிரிவுகள் ஜனவரி 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். பரீட்சை முடிவடைந்த பின்னர் மற்றைய பாடசாலைகள் ஆரம்பிக்கப்படலாம். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் கல்வி அமைச்சினால் விரைவில் வெளியிடப்படும் - என்றார்.

(ஐ)

Eelanadu
06.10.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணில், மேற்குலக சார்பிலிருந்து வெளியேறுகின்றாரா?

அண்மையில், ரணில் விக்கிரமசிங்க ஜேர்மனிய ஊடகமொன்றுக்கு தெரிவித்திருந்த கருத்துகள் ரணிலின் ஆதரவாளர்கள் மத்தியில் மட்டுமல்லாது ரணிலை விமர்சிப்பவர்கள் மத்தியிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இலங்கை அரசியல் தலைவர் ஒருவர் சர்வதேச அரங்கொன்றில் இவ்வாறு வெளிப்படையாகப் பேசியிருப்பது இதுதான் முதல் சந்தர்ப்பமாகும். நேர்காணல் செய்பவர் மிகவும் தெளிவாகவும் நன்கு திட்டமிடப்பட்ட கேள்விகளுடனும்தான் ரணிலை எதிர்கொண்டிருந்தார். குறித்த நேர்காணலின் போதான அறிமுகம் ரணிலுக்கு ஆதரவானதாக இருக்கவில்லை - மாறாக, ரணிலுக்கு அதிருப்தியை ஏற்படுத்துவதாகவும் ரணிலை ராஜபக்ஷக்களின் அங்கமாக காண்பிப்பதாகவுமே இருந்தது.

ரணில் அனுபவம் வாய்ந்த ஓர் அரசியல்வாதி. ஆனால் தற்போது, இலங்கைத் தீவை சீர்குலைத்து - வங்குரோத்துநிலைக்கு கொண்டு சென்ற - இரண்டு ராஜபக்ஷ சகோதரர்களுடனும் நெருக்கமான உறவிலிருக்கின்றார் - இந்த அறிமுகம் மேற்குலகின் மத்தியில் ரணில் தொடர்பில் சாதகமான பார்வையில்லை என்பதையே காண்பிக்கின்றது. இதனை ரணிலும் எதிர்பார்த்திருந்தமையால்தான் - ரணிலின் பதிலும் கடுமையாக இருந்திருக்கின்றது. ரணில் விரைவில் சீனாவுக்கு பயணமாகவுள்ளார் என்பதையும் இந்த இடத்தில் குறித்துக்கொள்ள வேண்டும்.

சனல் 4 அண்மையில் வெளியிட்ட காணொலியும் ரணிலுக்கு ஆதரவானதல்ல - மாறாக ரணிலுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தக் கூடியது. குறித்த காணொலி உண்மை தொடர்பில் - அந்த உண்மையை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் தொடர்பில் கரிசனை கொள்ளவில்லை. மாறாக - ஒரு மேற்குலக ஊடகம் நினைத்தால் மூன்றாம் உலக நாடொன்றுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்த முடியுமென்னும் மனோநிலையிலேயே செயல்பட்டிருக்கின்றது. வெளிநாட்டை சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்பதை ஒரு சான்றாகக் கொண்டே தங்களுக்கு இந்த விடயத்தில் தலையீடு செய்வதற்கு உரித்துண்டு என்னும் அடிப்படையில்தான் விடயத்தை கையாண்டிருந்தது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி குஜராத் முதலமைச்சராக இருந்த காலத்தில் இடம்பெற்ற, இந்து - முஸ்லிம் கலவரத்தின் போது, பிரித்தானியர்கள் கொல்லப்பட்டனர் என்று கூறி பிரித்தானிய ஊடகமொன்று குறித்த கொலைகளில் மோடிக்கும் தொடர்பிருப்பதாகக் குற்றம்சாட்டியது - அதனடிப்படையில் ஆவணப் படமொன்றையும் வெளியிட்டிருந்தது.

மூன்றாம் உலகைச் சேர்ந்த அரசியல் தலைவர்களை எவ்வாறும் சித்தரிக்கும் அதிகாரத்தை மேற்குலக ஊடகங்கள் தாங்களாகவே எடுத்துக் கொள்கின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில், இலங்கை விடயத்திலும் மேற்குலக ஊடகங்கள் சில தீர்மானகரமான நிலைப்பாடுகளை கொண்டிருக்கின்றன. ரணில் மேற்குலகின் மத்தியில் நன்கு அறியப்பட்ட ஓர் இலங்கை அரசியல்வாதி - மேற்கு உலகின் நண்பராகக் கருதப்படும் ஒருவர். ஆனால், அவரை மேற்குலக ஊடகங்கள் கேள்விக்கு உள்ளாக்க முற்படும்போது, அதற்கு ரணில் கடுமையாக எதிர்வினையாற்றிருக்கின்றார்.

ரணிலின் இலங்கையை மீட்கும் முயற்சிக்கு மேற்குலகம் விரைந்து செயல்படுமென்னும் எதிர்பார்ப்பு ஆரம்பத்தில் இருந்தது. ரணில் ஒரு மேற்கு சார்பானவர் என்பதே இந்த எதிர்பார்ப்புக்குப் பின்னாலிருந்த ஒரேயொரு நம்பிக்கையாகும். ஆனால், அவ்வாறு நிகழவில்லை - மாறாக, ரணில் மொட்டுவின் ஆதரவுடனிருப்பதை காரணம்காட்டி, ரணிலுக்கும் நெருக்கடியான சூழலை ஏற்படுத்தும் வகையிலேயே மேற்குலக ஊடகங்கள் செயல்படுகின்றன.

இந்த பின்புலத்தில் நோக்கினால், ரணில் முன்னரைப் போன்று மேற்கு ஒன்றுதான் கதியென்று செயலாற்றும் நிலையில் இல்லை. தவிர உலகெங்கும் ஏற்பட்டுவரும் அரசியல் கொதிநிலையையும் ரணில் கவனமாக உள்வாங்கிக் கொள்ள முயற்சிப்பதாகவும் தெரிகின்றது. இல்லாவிட்டால், மேற்குலகை தாக்கும் வகையில் ரணிலால் ஒரு போதும் பதிலளித்திருக்க முடியாது.

தொடர்ந்தும் தூய மேற்கு சார்பான அணுகுமுறை தனது நகர்வுகளுக்கு வெற்றியளிக்க முடியாதென்னும் நிலைப்பாட்டிலேயே ரணில் செயல்பட முயற்சிக்கின்றாரா? இந்தக் கேள்விக்கு சாதாரணமாக - இல்லையென்று பதிலளிக்க முடியாது.

# அரசாங்கம் மனச்சாட்சி இல்லாது எரிவாயு விலையை உயர்த்தியுள்ளது!

## எதிர்க்கட்சி தலைவர் சாடல்



கொழும்பு, ஒக். 06

அரசாங்கம் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு பதிலாக பொருளாதாரத்தை நசுக்கும் கொள்கையையே கடைப்பிடித்து வருகிறது. அதனால் வருமான வழிகள் குறைவடைந்து மக்கள் வாழ முடியாத நிலையில் இருக்கும் தறுவாயில் அரசாங்கம் மனசாட்சி இல்லாமல் எரிவாயு விலை அதிகரித்திருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கம் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு பதிலாக பொருளாதாரத்தை நசுக்கும் கொள்கையையே பின்பற்றி வருகிறது. பொருளாதார சுருக்கப்படுவதன் மூலம் வருமான வழிகள் குறைவடையும்போது நாட்டு மக்கள் எவ்வாறு வாழமுடியும் என கேட்கிறேன்.

அரசாங்கம் சமையல் எரிவாயு விலையை 343 ரூபாயால் அதிகரித்திருக்கிறது. நீர் கட்டணத்தை அதிகரித்திருக்கிறது. மின்சார கட்டணத்தை 3ஆவது தடவையாகவும் அதிகரிக்க தீர்மானித்திருக்கிறது. ஆனால் அரசாங்கத்தின் புள்ளிவிபரத்தில் பண வீக்கம் குறைவடைந்துள்ளதாக அரசாங்கம் புள்ளி விபரங்களை வெளியிட்டு வருகிறது. ஆனால் பண வீக்கம் குறைவடைந்துள்ளமை மக்களுக்கு உணரக் கூடியதாக இல்லை.

அதேநேரம் கடந்த 48 மணி நேரத்தில் 11பேர் காணாமல் போயிருக்கின்றனர்.அதில் 5பேர் சிறுவர்கள். அத்துடன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அறிக்கையின் பிரகாரம் இந்த நாட்டில் 10பேரில் 6பேர் ஆபத்தான நிலையில் இருப்பதான நிலையில் இருக்கின்றனர்.

ஆதவாது நாட்டின் மொத்த சனத்தொகையில் 221 இலட்சம் பேரில் 123 இலட்சம் பேர் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர். போதைப்பொருள் பாவனை அதிகரித்து செல்கிறது. புதுவகை போதை பொருள் ஒன்று வந்திருப்பதாக வைத்தியர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். இவ்வாறான நிலையில் நாட்டில் எந்த பிரச்னையும் இல்லாத வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

அத்துடன் மனசாட்சிக்கு இணங்கவா அமைச்சரவை காஸ் விலை அதிகரிக்க இணக்கம் தெரிவித்தது என கேட்கிறேன். பொருளாதாத்தை சுருக்கிக் கொண்டு மக்கள் மீது சுமையை அதிகரிக்கிறது. அதனால் இது தொடர்பில் அரசாங்கம் உணவு ரீதியாக செயற்பட்டு மக்கள் தொடர்பில் சிந்தித்து தீர்மானங்களை மேற் கொள்ள வேண்டும் என்றார்.

(ஐ)

# இலங்கையின் குரங்குகளை சீனா தவிர்ந்த நாடுகளும் கேட்டன!

## விவசாய அமைச்சர்



கொழும்பு, ஒக். 06

சீனாவை தவிர வேறு பல நாடுகளும் தமது விலங்கியல் பூங்காவுக்கு இலங்கையின் செங்குரங்குகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று சபையில் தெரிவித்தார்.

குறித்த நாடுகள் தமது நாடுகளில் உள்ள உரிய தூதரகங்கள் ஊடாக இந்த கோரிக்கையை முன்வைக்குமாறு அரசாங்கம் தமக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


குரங்குகளை ஏற்றுமதி செய்வதற்கான தீர்மானம் குறித்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

குரங்குகளை ஏற்றுமதி செய்வதற்கான கோரிக்கைகளை வன விலங்கு உரிமை தொடர்பான அமைப்புகளும் ஆர்வலர்களும் சவாலுக்குட்படுத்தி மனு தாக்கல் செய்திருந்த நிலையில் அவை நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

குரங்குகள், காட்டுப் பன்றிகள் மற்றும் மயில்கள் போன்ற விலங்குகளால் ஆண்டுக்கு சுமார் 2,000 கோடி ரூபாய் விவசாய பொருட்களுக்கு இழப்பு ஏற்படுகிறது.

குரங்குகளின் ஏற்றுமதிக்கு எதிரான விலங்குகள் உரிமை அமைப்புகளுடன் பயிர் சேதத்தைத் தடுப்பதற்கான அவர்களின் முன்மொழிவுகள் குறித்து விவாதித்ததாகவும், எனினும் அவை எதுவும் நடைமுறை ரீதியான தீர்வுகளைக் எவரும் வழங்கவில்லை எனவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு




**மேடம்**

தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உயரதிகாரி பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**இடபம்**

கடந்த 2 நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**மிதுனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலி பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**கடகம்**

ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். போராடி வெல்லும் நாள்.

**சிம்மம்**

எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். சிறப்பான நாள்.

**கன்னி**

உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாறறுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். ஊழியர்கள் ஆதரிப்பார்கள். நன்மை நடக்கும் நாள்.

**துலாம்**

கடந்த 2 நாட்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருட்சிகம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். மறைமுக அவமானம் வந்து நீங்கும். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**தனுசு**

உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் உறுதுணை யாக இருப்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்**

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உயரதிகாரி சில சூட்சமங்களை சொல்லித் தருவார். தொட்டது துலங்கும் நாள்.

**கும்பம்**

மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**

நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். மேலதிகாரிகள் நம்பிக்கை அளிக்கும்படி பேசுவார்கள். நன்மை கிட்டும் நாள்.

# இந்துக் கோயில்களில் இருந்து தமிழக அரசு வெளியேறவேண்டும்

## பா. ஜ. கட்சி வலியுறுத்து

கோவை, ஒக். 06

“மதச்சார்பின்மையை காக்க இந்து கோயில்களில் இருந்து தமிழக அரசு வெளியேற வேண்டும்” என பாஜக எம்எல்ஏ வானதி சீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

“தெலங்கானா மாநிலம் நிஜாமாபாதில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற பா. ஜ. க. பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி, ‘தமிழ்நாட்டில் இந்து கோயில்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. கோயில்களின் சொத்துகள் கூட்டுச் சதி மூலம் அபகரிக்கப்பட்டு வருகிறது. ஆனால், சிறுபான்மையினரின் வழிபாட்டுத் தலங்களை தமிழ்நாடு தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவில்லை’ என்று பேசியிருக்கிறார்.

தமிழக இந்துக்களின் மிக முக்கியமான பிரச்னை குறித்து, அழுத்தம் திருத்தமாக தனது கருத்தை பிரதமர் பதிவு செய்திருக்கிறார். இதனால், யாரும் கண்டுகொள்ளாத தமிழக இந்துக்களின் பிரச்னை, தேசிய அளவில் கவனம் பெற்றுள்ளது. வழிபாட்டுத் தலங்களை நிர்வகிப்பது அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமை. மதச்சார்பற்ற அரசுக்கு மத விவகாரங்களில், கோயில் நிர்வாகங்களில் தலையிட உரிமை இல்லை.

அதிக வருமானம், அதிக சொத்துகளை கொண்ட கோயில்களில் மட்டுமே தி. மு. க. அரசு கவனம் செலுத்துகிறது. சிதிலமடைந்து கிடக்கும் ஆயிரமாண்டு கோயில்கள் கூட சீரமைக்கப்படுவதில்லை. கோயில் சொத்துக்களில் இருந்து வர வேண்டிய வாடகை, குத்தகை வந்தாலே, சென்னை ஸ்டான்லி மருத்துவமனை போல ஒரு மக்களவைத் தொகுதிக்கு ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஒரு சட்டப்பேரவை தொகுதிக்கு ஒரு மருத்துவமனை, ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு மேல்நிலைப் பள்ளியை நடத்த முடியும்.

ஆனால், கோயில் சொத்துக்களில் இருந்து வர வேண்டிய வாடகை, குத்தகையை வசூலிக்கவோ, ஆக்கிரமிப்பில் உள்ள கோயில் சொத்துகளை மீட்கவோ, கோயில்களை நிர்வகிக்கும் தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கோயில்களை, இந்து மதத்தை, பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் உள்ள இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்கிறார். எனவே, மதச்சார்பின்மையை காக்க, இந்து கோயில்களில் இருந்து அரசு வெளியேற வேண்டும்” என்று வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

(ஐ)

# அண்ணாமலையை மாற்றவேண்டும் எனக் கோரியதாக கூறுவது தவறானது

## எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு

சேலம், ஒக். 06

தமிழக பா. ஜ. கவின் மாநிலத் தலைவர் அண்ணாமலையை மாற்ற வேண்டும் என்று அ. தி. மு. க. கூறியதாகத் தெரிவிக்கப்படும் கருத்துகள் தவறானவை. நாங்கள் எந்த கோரிக்கையும் வைக்கவில்லை. அதுபோல், பா. ஜ. கவுக்கு 20 இடங்கள் வேண்டும், 15 இடங்கள் வேண்டும் என்றெல்லாம் அவர்களும் எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை” என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலம் மாவட்டம் எடப்பாடியில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம்,

பா. ஜ. க. கூட்டணியில் இருந்து அ. தி. மு. க. வெளியேறிவிட்டது. பா. ஜ. க நிர்வாகிகள் அ. தி. மு. கவில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளனர். எனவே, அதை மறுபரிசீலனை செய்வீர்களா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர்,

“அது அவர்களின் விருப்பம். ஏற்கெனவே நான் தெளிவுபடுத்திவிட்டேன் கடந்த 25ஆம் திகதி தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், இரண்டு கோடி தொண்டர்களின் உணர்வுகளை அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனடிப்படையில், ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பா. ஜ. க. கூட்டணியில் இருந்து அ. தி. மு. க. விலகிக் கொள்கிறது என்றும், தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தின் அடிப்படையில், அ. தி. மு. க. - பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகிவிட்டது” என்றார்.

அ. தி. மு. க., பா. ஜ. க. தனித்தனியாக கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்தால் தி. மு. கவுக்கு எதிரான வாக்குகள் சிதறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது அல்லவா? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், “மக்களுடைய மனநிலை எப்படி இருக்கும் என்று யாருக்கும் தெரியாது. வாக்களித்தப் பிறகுதான் முடிவு தெரியும். எங்களைப் பொறுத்தவரை, அ. தி. மு. க. தலைமையில் அமைக்கப்படும் கூட்டணி, புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் வெற்றி பெறும் - என்றார்.

(ஐ)

# தமிழகத்தில் பெருகும் குற்றங்கள் தி. மு. க. அரசாங்கத்தின் தோல்வி!

சென்னை, ஒக். 06

“தமிழகத்தில் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட கொடுங்குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தி. மு. க. அரசின் நிர்வாகத் தோல்வியையே காட்டுகிறது. காவல்துறையைத் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துள்ள முதல்வர் ஸ்டாலின், தற்போதைய சட்டம் ஒழுங்கு சீரழிவுக்கான முழுபொறுப்பையும் ஏற்று, அதனைச் சீர்செய்வதற்கான முயற்சியை முன்னெடுக்க வேண்டும்” என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

திருநெல்வேலி அருகே உள்ள திருப்பணிகரிசல் குளம் கிராமத்தைச் சேர்ந்த சந்தியா, திருநெல்வேலி மாநகரில் உள்ள அழகு நிலைய பொருள் விற்பனைக் கடையில் பணியாற்றி வந்த நிலையில், ஒரு தலைகாதல் காரணமாக அதே பகுதியில் பணிபுரிந்து வந்த இளைஞரால் படுகொலை செய்யப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியையும், மிகுந்த மனவேதனையையும் அளிக்கிறது.

தமிழகத்தில் அண்மைக்காலமாக இளம்பெண்கள் பட்டப்பகலில் படுகொலை செய்யப்படுவது அதிகரித்துவருவது தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முற்றாகச் சீரழிந்துள்ளது என்பதையே வெளிப்படுத்துகிறது. 18 வயது நிரம்பாத இளம் பிள்ளைகள் அதிகளவில் கொலை செய்யப்படுவதும், கொலை செய்யும் அளவுக்குக் கொடூர குணமுடையவர்களாக ஆகிவிட்டதும் சமூகமே குற்றச்சமூகமாக மாறி நிற்பதையே காட்டுகிறது.

தமிழகத்தில் 60 ஆண்டுகாலம் தொடர்ச்சியாக ஆண்டுவரும் இரு திராவிடக் கட்சிகளின் நெறிதவறிய ஆட்சியால் மது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் விற்பனை சந்தையாக தமிழ் நிலத்தை மாற்றி நிறுத்தியுள்ளதன் விளைவே தற்போது இளைய தமிழ்ச்சமூகம் சீரழிந்துள்ளதற்கான முக்கியக் காரணமாகும். மதுபானத்தை அரசே விற்கும் திராவிடக் கட்சிகளின் கொள்கை நிலைப்பாடே தமிழகத்தில் நடக்கின்ற அனைத்துச் சமூகக் குற்றங்களுக்கும் அடிப்படையாகும். குறிப்பாக, தி. மு. க.ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு என்பதே முற்றாகச் சீரழிந்துள்ளது.

கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை உள்ளிட்டக் கொடுங்குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது திமுக அரசின் நிர்வாகத் தோல்வியையே காட்டுகிறது. காவல் துறையை தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துள்ள முதல்வர் ஸ்டாலின், தற்போதைய சட்டம்-ஒழுங்கு சீரழிவுக்கான முழுபொறுப்பையும் ஏற்று, அதனைச் சீர்செய்வதற்கான முயற்சியை இனியாவது துரிதமாக முன்னெடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன். (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தை அறிவித்தது தவறு

## பொன்சேகா போர்க்கொடி

கொழும்பு, ஒக். 06

**தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவின் பெயரை ஐக்கிய மக்கள் சக்தி முன்கூட்டியே அறிவித்துள்ளமை தவறான முடிவாகும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே வேட்பாளரை பெயரிட்டிருக்க வேண்டும். அதுவும் மக்கள் மன நிலையை அறிந்து, வெற்றிபெறக்கூடிய வேட்பாளரையே களமிறக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கட்சியின் அரசியல் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும்.



எனவே, வெற்றி பெறக்கூடிய வேட்பாளரையே ஐக்கிய மக்கள் சக்தி களமிறக்க வேண்டும், ஜனாதிபதி வேட்பாளரை முன்கூட்டியே அறிவித்த கட்சியின் முடிவு தவறாகும். ஒரு வருடத்துக்கு முன்னரே அறிவிக்கப்பட்டால் மக்களின் மனநிலை மாறக்கூடும்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட காலப்பகுதியில் சஜித்தான் வெற்றி வேட்பாளர் எனில் அவர் நிச்சயம் களமிறங்க வேண்டும். அப்போது நாமும் அவருக்கு ஆதரவாக செயற்படுவோம். மக்கள் ஆதரவு இல்லாத சூழ்நிலையிலும் சஜித் களமிறக்கப்பட்டால், நான் ஒதுங்கி நிற்பேன். தீர்க்கமான அரசியல் முடிவை எடுப்பேன்-என்றார்.

# மகிந்தவின் மவுசு குறையவேயில்லை

## கூறுகிறார் எஸ்.எம். சந்திரசேன

கொழும்பு, ஒக். 06

"மகிந்த ராஜபக்ஷதான் போரை முடிவுக்கு கொண்டு வந்தார், எனவே, அவரை சில அரசியல் வாதிகள் கிழட்டு மைனா என விமர்சித்தாலும் மக்கள் மத்தியில் அவருக்கான செல்வாக்கு - மதிப்பு குறையவே இல்லை." - என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறீ லங்கா சுதந்திரக் கட்சி எதிரணியில் உள்ளது என அக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறினாலும், அவரின் உறுப்பினர்கள் அமைச்சர்களாக உள்ளனர். இதன்மூலம் அவர்களின் இரட்டைக் கொள்கை அரசியல் தெளிவாகின்றது.

மகிந்தவுடன் இணையப் போவதில்லை எனவும் மைத்திரி கருத்து வெளியிட்டுள்ளார். மகிந்தவுடன் இணைந்து போட்டியிட்டதால்தான் அவருக்கு பாராளுமன்றம் வரமுடிந்தது என்பதை மறந்துவிட்டார்போலும்.

மகிந்த இந்நாட்டுக்காக பொறுப்புகளை நிறைவேற்றிய தலைவர். 30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவந்தார். பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுத்தார். இப்படியானவர் எமது கட்சி தலைவராக இருப்பது பெருமை அளிக்கின்றது.

மகிந்தவுக்கான மதிப்பு மக்கள் மத்தியில் உள்ளது. அதனை எவரும் ஒளிக்க முடியாது. மைனா, திருடன் என ஜே.வி.பி காரர்கள் விமர்சித்தாலும், நாட்டை மீட்டது யார் என்பது மக்களுக்கு தெரியும்-என்றார். (அ)

# மழையால் சிறுவர்களுக்கு நோய்கள் பரவும் ஆபத்து!

கொழும்பு, ஒக். 06

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக சிறுவர்கள் மத்தியில் பல்வேறு நோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக சிறுவர் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மைக் காலமாகப் பெய்துவரும் கனமழை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்டுள்ளன.

இதனால், பல்வேறு நோய்கள் பரவி வருகின்றன. குறிப்பாக சிறுவர்கள் மத்தியில் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதோடு சுவாசம் சம்பந்தமான நோய்களும் ஏற்பட்டு வருகின்றன.

அத்துடன் சிறுவர்களின் உடல் பருமன் மேலும் அதிகரித்து வருகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் சுத்தமான நீர் மற்றும் உணவினை எடுத்துக்கொள்வது அவசியம். இதன்மூலம் வாந்தி, வயிற்றுப்போக்கு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும்-என்றார். (அ)

# ரயில் கட்டுப்பாட்டாளர்களின் பணிப் பகிஷ்கரிப்பு நிறைவு

கொழும்பு, ஒக். 06

உப ரயில் கட்டுப்பாட்டாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்று காலை போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட ரயில்வே திணைக்களத்தின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் பணிப்பகிஷ்கரிப்பு இவ்வாறு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்று பகல் 12 மணிக்கு முன்னதாக அனைத்து உப ரயில் கட்டுப்பாட்டாளர்களும் உடனடியாக தமக்குரிய பணியிடங்களுக்கு சமூகமளிக்க வேண்டுமென ரயில்வே பொது முகாமையாளரினால் முற்பகல் அறிவிக்கப்பட்டிருந்தது.

உரிய பணியிடங்களுக்கு சேவைக்கு சமூகமளிக்க முடியாதோர் அருகிலுள்ள ரயில் நிலையங்களுக்கு செல்ல வேண்டுமென ரயில்வே பொதுமுகாமையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ரயில்வே பாதுகாப்பு அதிகாரியொருவரால் உப ரயில் கட்டுப்பாட்டாளர் ஒருவர் தாக்கப்பட்டமை காரணமாக ரயில்வே உப கட்டுப்பாட்டாளர்களால் திடீர் பணிப்பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இதன் காரணமாக நேற்று முன் தினம் பல ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வைத்தியரின் கைபேசியை திருடிச் சென்றார் நோயாளி!

கொழும்பு, ஒக். 06

கொழும்பு - புளூமண்டல் பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த சுகவீனமுற்ற நபர் ஒருவர் வைத்தியரின் 400,000 ரூபா பெறுமதியான அப்பிள் கைத்தொலைபேசியை திருடிச் சென்றுள்ளதாக புளூமண்டல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து 68 வயதான மருத்துவர் புளூமெண்டல் பொலிஸில் முறைப்பாடளித்துள்ளார்.

இந்தக் கைத்தொலைபேசியை திருடியவரின் அடையாளம் இதுவரை கிடைக்கப்பெறாத நிலையில், குறித்த நபரைக் கைது செய்ய புளூமெண்டல் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# வெள்ளத்தினால் சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்க கணக்கீட்டு பணி ஆரம்பம்

கொழும்பு, ஒக். 06

வெள்ளத்தினால் சேதமடைந்த பயிர்ச்செய்கைகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

இதற்கான கணக்கீடுகள் தென் மாகாணத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் மத்துமபண்டார வீரசேகர தெரிவித்தார்.

மாவட்ட அலுவலக மட்டத்தில் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

வறட்சியினால் ஏற்பட்ட சேதங்கள் கணக்கிடப்பட்டு அதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும், இந்தக் கணக்கீடுகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டு விரைவில் பணம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# போதைப்பொருளுடன் சிக்கிய 27 வயது பெண்

கொழும்பு, ஒக். 06

கணேமுல்ல சஞ்சீவவின் உதவியாளரான டுபாயில் தலைமறைவாகியுள்ள கலனவின் போதைப்பொருள் வர்த்தகத்தை நாட்டினுள் வழிநடத்தி வந்த யுவதி ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

'இமா' என்ற குறித்த பெண்ணிடம் இருந்து 5 கிராம் 490 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

ராகம பொலிஸ் பிரிவின் குருகுலாவ பிரதேசத்தில் நேற்று முன் தினம் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் குழுவொன்று சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளது.

இதன்போது வத்தளை, எந்தரமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 27 வயதுடைய இமா என்ற பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

துனுமலை பிரதேசம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பான துப்பாக்கிகளை அவர் கொண்டு சென்றுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக ராகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நூற்றாண்டு கால ஆசிரிய தின விழா

## இசைப்பேழையும் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 06

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஆசிரியர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆசிரிய மாணவர் மன்றத்தலைவர் சுப்பிரமணியம் தனசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார்.

நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவரும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியரும் இசையமைப்பாளருமாகிய ஜேம்ஸ் அன்ரன் லூர்ஜினோவின் கலாசாலைத்தாயே. என்ற இசைப்பேழையும் வெளியிட்டு வைக்கப்படும். (அ)

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் நிறுத்தப்படும் சூழல்!

## நிதி இல்லாமையே காரணம்

முல்லைத்தீவு, ஒக். 06

**கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் நிறுத்தப்படும் சூழல் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்துள்ளார்.**

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலுள்ள பிரதான கணக்காளர், அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதி இல்லை என கூறியுள்ளார்.

இதனால் அகழ்வுப் பணிகள் நிறுத்தப்படக்கூடிய சூழல் காணப்படுவதோடு, உடற்கூற்று பரிசோதனை முடிவுகளும் தாமதமாகக் கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன-என்றார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 15 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது 17 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டிருந்தன. இந்நிலையில் குறித்த அகழ்வுப்பணியானது இடைநிறுத்தி வைக்கப்பட்டு ஒக்டோபர் மாதம் மூன்றாம் வாரமளவில் இதே குழுவினரால் மீள ஆரம்பிக்கப்படும் என முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தொழில் வாய்ப்புக்காக கொரியாவுக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு



கொழும்பு, ஒக். 06

இலங்கையிலிருந்து தென் கொரியாவுக்கு தொழில் வாய்ப்பிற்காக செல்பவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தை கடந்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இந்த ஆண்டு அதிகளவிலானோர் தொழில் வாய்ப்புக்காக தென் கொரியாவிற்கு சென்றுள்ளமையே இந்த அதிகரிப்புக்கான காரணம் என அவர் குறிப்பிட்டார்.

இந்த வகையில், இந்த வருடத்தின் கடந்த 9 மாதங்களில் மாத்திரம் தென்கொரியாவிற்கு வேலைவாய்ப்பிற்காக சென்றவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 91 ஆக பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது கடந்த வருடங்களை காட்டிலும் 44 சதவீத அதிகரிப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் இருந்து கடந்த வருடம் முழுவதும் தொழில் வாய்ப்பு நிமித்தம் தென்கொரியாவிற்கு மூவாயிரத்து 460 பேர் மாத்திரமே சென்றிருந்ததாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறினார். (அ)

# வாகன விபத்தில் பரிதாபமாக உயிரிழந்த ஒரு வயது குழந்தை

கொழும்பு, ஒக். 06

களுபோவில பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரு வயதான குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

நேற்று முன் தினம் மாலை கொஹூவலையிலிருந்து தெஹிவளை நோக்கி பயணித்த கார் ஒன்று ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளான தாய் மற்றும் அவரது ஒரு வயது குழந்தை களுபோவிலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது.

தாய் தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அத்துடன் விபத்தில் காயமடைந்த மற்றைய பெண்ணும் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பில் காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொஹூவளை காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஆய்வறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு!

கொழும்பு, ஒக். 06

சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்தும் ஆய்வறிக்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பிரச்னைகளில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் முழுமையான நலன்புரிகள் தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி ஜனாதிபதியினால் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

பெற்றோரின் அரவணைப்பு இன்மை, குடும்பப் பிரச்னைகள், சமூக ஊடக பாவனை, சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தல் உள்ளிட்ட பிரச்னைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

மேலும் பல்வேறு விதமான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் மற்றும் அனாதரவாக விடப்பட்ட சிறுவர்களின் உடல், உளச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளும் குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதனூடாக சிறுவர்கள் வன்முறைகளில் ஈடுபடும் தன்மை தொடர்பில் கவனம் செலுத்தி சிறுவர் பாதுகாப்புக்கு அவசியமான சமூக பங்களிப்பு தொடர்பிலான புதிய பிரவேசங்கள் பற்றிய விடயங்களும் ஆராயப்பட்டுள்ளன.

சிறுவர்களுக்காக மேற்கொள்ளப்படும் நிறுவனம் சார்ந்த பாதுகாப்புக்களை மட்டுப்படுத்தி குடும்ப மட்டத்திலான பாதுகாப்பினை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# உணவு பொருட்களின் விலைகள் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 06

உணவு பொருட்கள் சிலவற்றின் விலையை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி, பிரைட் ரைஸ், கொத்து ரொட்டி மற்றும் தேநீர் என்பவற்றின் விலையை அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நீர்க்கட்டணம், மின்சார கட்டணம் மற்றும் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளமையினால் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்தார்.

அதற்கமைய, பிரைட் ரைஸ் விலை 50 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொத்து ரொட்டியின் விலையை 20 ரூபாவினாலும் தேநீரின் விலையை 10 ரூபாவினாலும் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் கூறினார். (அ)

# கோழி இறைச்சியின் விலையில் மாற்றம்?



கொழும்பு, ஒக். 06

எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குள் கோழி இறைச்சியின் விலையில் மாற்றம் செய்யப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனை கூறினார்.

இதன்படி, 1 கிலோ கிராம் கோழி இறைச்சியை 850 ரூபாவுக்கு வழங்க எதிர்பார்ப்பதாக வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார்.

கால்நடை தீவனத்திற்கு வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ள நிலையில், கோழிப்பண்ணை உற்பத்தியாளர்களும் மக்களுக்கு சலுகைகளை வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேவைப்பட்டால் முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டும் எனவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார். (அ)

# சிறிலங்கன் விமான சேவைக்கு பதில் அப்பக் கடை ஒன்றைத் திறக்கலாம்!

## கூறுகிறார் சாமர சம்பத் தஸநாயக்க



கொழும்பு, ஒக். 06

சிறிலங்கன் விமான சேவைக்கு பதிலாக அப்ப கடை ஒன்றை நடத்தினால், சிறந்தது எனவும் நாட்டின் பிரதான விமான சேவை நிறுவனம் நஷ்டத்தில் இயங்குகின்றது என்றால் அப்பக்கடையை திறப்பது சிறந்த இலாபத்தை கொடுக்கும் எனவும் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அளுத்கமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனது அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் ஊடாக அரசாங்கத்திற்கு இந்த ஆண்டு ஒரு பில்லியன் ரூபாவை வழங்குவேன்.

அனுராதபுரத்தில் பொஸ்பேட் நிறுவனம் உள்ளது, நான் பொறுப்பேற்கும் போது 150 மில்லியன் ரூபா நட்டத்தில் காணப்பட்டது. ஊழியர்களுக்கான சம்பளத்தைச் செலுத்த முடியாமல் இருந்தது.

நான் பொறுப்பேற்று 8 மாதங்களில் 350 மில்லியன் ரூபாவை திறைசேரிக்கு வழங்க முடிந்துள்ளது.

மாணிக்கல் ஏற்றுமதியில் 350 மில்லியன் ரூபா, பீ.சீ.சீ நிறுவனத்தில் 100 மில்லியன், சீமெந்து கூட்டுத்தாபனத்தில் 100 மில்லியன் என அரசாங்கத்திற்கு எனது அமைச்சின் கீழ் ஆயிரம் மில்லியன் ரூபாவை வழங்க முடியும்-என்றார். (அ)

# சட்டவிரோத துப்பாக்கிகள் வைத்திருந்த நபர் கைது!

முல்லைத்தீவு, ஒக். 06

முல்லைத்தீவு - கேப்பாபிலவு பகுதியில் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கிகளை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் இருந்து இரண்டு துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சர்வதேச நாணய நிதியத்தின் கிடுக்கிப்பிடிக்குள் இலங்கை!

## ஹர்ச டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 06

**சர்வதேச நாணய நிதியம், இலங்கை சம்பந்தமாக வெளியிட்டுள்ள புதிய நல்லாட்சி, ஊழல் மற்றும் மோசடி தடுப்பு அறிக்கையின் மூலம் நிறைவேற்றவேண்டிய 16 பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.**

இரண்டாவது தவணை கடனை எப்படியாவது பெற்றுக் கொண்டாலும் அதன் பின்னர் நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டியேற்படும்.

இந்த பரிந்துரைகள் மூலம் இலங்கை சரியான வழியை நோக்கி கொண்டு வரப்படும். இந்த விடயங்கள் காரணமாக ஆரம்பத்தில் இருந்தே சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுமாறு நான் வலியுறுத்தி வந்தேன் எனவும் ஹர்ச டி சில்வா கூறினார்.

மேலும் சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள 16 பரிந்துரைகளையும் அவர் வெளியிட்டுள்ளார்.

1- 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் சுயாதீன ஊழல் எதிர்ப்பு ஆலோசகர்கள் அடங்கிய ஆலோசனை குழுவை நியமிப்பது.

2-ஊழல் எதிர்ப்பு சட்டத்திற்கு அமைய சிரேஷ்ட அதிகாரிகளின்( ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள்) சொத்துகள் தொடர்பான அறிக்கையை தெரிவு செய்யப்பட்ட இணையத்தளத்தில் 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குள் பகிரங்கப்படுத்துதல்.

3-குற்றவியல் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.

4-தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தை திருத்துதல்.

5- நிறுவனங்கள் சட்டமூலத்திற்கு அமைய தேவையான நன்மைகள் தொடர்பான தகவல்கள் மற்றும் நன்மைகளை பெறும்



உரிமையளர்கள் பட்டியலைவ தயாரிப்பதற்கான சட்டத்தை நிறைவு செய்து, நடைமுறைப்படுத்தல்.

6- 2024 ஆம் ஆண்டு டிசம்பருக்குள் சர்வதேச சிறந்த நடைமுறைகளை உள்ளடக்கிய தேசிய கொள்முதல் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

7- 2024 ஆம் ஆண்டு டிசம்பருக்குள் ஒரு இணையதளத்தில் போட்டி டெண்டர் கொள்முதல் ஒப்பந்தங்களின் வளர்ச்சி குறித்த அறிக்கையை வெளியிடுதல்.

8- 2024 ஆம் மார்ச் மாதம் முதல் ஒரு பில்லியன் ரூபாவுக்கும் மேல் மதிப்புள்ள அனைத்து அரசு கொள்முதல் ஒப்பந்தங்கள், முதலீட்டுச் சபையின் கீழ் வரிச் சலுகை பெற்ற அனைத்து நிறுவனங்களின் பெயர்கள், வரிச் சலுகைகளால் இழந்த வரித் தொகை மற்றும் நிறுவனங்கள் பெற்ற வரிச் சலுகைகள் சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வது குறித்து இணையதளத்தில் வெளியிட வேண்டும். இந்த தகவல்கள் 06 மாதங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

9- பொது நிறுவனங்கள் சீர்திருத்தக் கொள்கையை உருவாக்குதல்.

10-மூலோபாய அபிவிருத்தி திட்டங்கள் சட்டத்தின் கீழ் வெளிப்படைத்தன்மை ஏற்படும் வரை நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை இடைநிறுத்துதல் அல்லது நிறுத்துதல்.

11- முறையான பாராளுமன்ற அனுமதியின்றி அமைச்சர் வரிகளை அறிமுகப்படுத்துவதை தடுக்கும் வகையில் வரி விதிப்பு சட்டத்தில் திருத்தம் செய்தல்.

12- மோசடி மற்றும் ஊழலைத் தடுக்க அனைத்து வருமானத்தை வசூலிக்கும் திணைக்களங்களில் குறுகிய கால ஊழல் தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தல்.

13-மத்திய வங்கியின் நேரடி நிர்வாகத்திடம் இருந்து ஊழியர் சேமலாப வைப்பு நிதி நீக்குவதற்காக அமைச்சரவை முன்மொழிவை 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் சமர்ப்பித்தல்.

14- வங்கித் துறை மற்றும் நிதித் துறையின் மேற்பார்வைக்கான விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை வலுப்படுத்துதல்.

15- 2024 ஆம் ஆண்டு டிசம்பருக்குள்,ஒன்லைன் டிஜிட்டல் காணி கோப்புகளை திறந்து இணையதளத்தில் அந்த தகவலை வெளியிடுதல்.

16- நீதிச் சேவை ஆணைக்குழுவின் திறன்களை விரிவுபடுத்துவதற்காக அதன் வளங்கள் மற்றும் திறமைகளை அதிகரிப்பதற்கான திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தல் என்பது அந்த பரிந்துரைகளாகும் எனவும் ஹர்ச டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

# அவுஸ்திரேலிய அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தொடரவுள்ளேன்

## கூறுகிறார் தனுஷ்க குணதிலக

கொழும்பு, ஒக். 06

அவுஸ்திரேலியாவில் பாலியல் குற்றச்சாட்டை எதிர்கொண்டிருந்த இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக, தனது சட்டக் கட்டணத்தை வசூலிக்கக் கோரி அவுஸ்திரேலிய அதிகாரிகள் மீது வழக்கு தொடர உள்ளார்.

அவுஸ்திரேலியாவில் உள்ள சட்டங்கள் காரணமாக தன் மீது குற்றம் சுமத்திய பெண்ணுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என இலங்கை வந்த பின்னர் செய்தியாளர்களிடம் குணதிலக தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தனது சட்டக் கட்டணத்தை திரும்பப் பெறுவதற்கு அந்நாட்டு அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் பெரும்பாலான மக்கள் அவரை நம்பினாலும், நம்பாதவர்கள் இருப்பதாகவும், ஆனால் அது அவர்களின் உரிமை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரில் விளையாடியபோது, டிண்டர் செயலி மூலம் அறிமுகமான பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குணதிலக மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் அந்நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட அவர், 11 நாட்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இது குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், கடந்த வாரம் தனுஷ்க குணதிலக நிரபராதி என தீர்ப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெயர் குறிப்பிட முடியாத பெண், வேண்டுமென்றே பொய்யான ஆதாரங்களை சமர்ப்பித்ததாக நீதிபதி ஹகெட் கண்டறிந்தார்.

“பாதிக்கப்பட்டதாக கூறப்படும் பெண்ணின் ஆதாரங்களின் நம்பகத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது” என்று நீதிபதி ஹகெட் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்ட தனுஷ்க குணதிலக 11 மாதங்களின் பின்னர் நேற்று முன்தினம் நாடு திரும்பியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# விபத்து ஏற்படுத்திய பணிப்பாளர் கைது!

கொழும்பு, ஒக். 06

கார் விபத்தில் ஒரு வயது குழந்தை காயமடைந்து உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நகர அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொஹுவல பொலிஸார் தெரிவித்தனர்.

களுபோவில வைத்தியசாலை வீதியில் சந்தேகநபர் பயணித்த கார் முச்சக்கரவண்டியுடன் மோதியதில் குறித்த முச்சக்கர வண்டியில் பயணித்த தாயும் பிள்ளையும் காயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குழந்தை மருத்துவமனையில் உயிரிழந்ததாகவும், தாய் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# காட்டு யானைகளினால் 240 பாடசாலைகள் பாதிப்பு

கொழும்பு, ஒக். 06

வடமேற்கு மாகாணத்தில் காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளான 240 பாடசாலைகள் இனங்காணப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமேற்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் காட்டு யானை அச்சுறுத்தல் உள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளாகவும் காட்டு யானைகள்பாடசாலை மைதானத்திற்குள் நேரடியாக பிரவேசிக்கும் பாடசாலைகளாகவும் அடையாளப்படுத் தப்பட்டுள்ளன.

இந்த தரவு அட்டவணையின்படி, வடமேற்கு மாகாணத்தின் குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் 179 பாடசாலைகள் யானைகள் அச்சுறுத்தும் அபாய வலயங்களில் அமைந்துள்ளன.

மேலும் 61 பாடசாலைகள் காட்டு யானைகள் நேரடியாக பார்வையிடும் பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ளன.

இந்த தரவு அட்டவணையின்படி, குருநாகல் மாவட்டத்தின் இப்பாகமுவ கல்வி வலயத்தில் சில காலமாக யானைகளின் அச்சுறுத்தல் இல்லாமல் இருந்த 4 பாடசாலைகள் யானை அச்சுறுத்தலுக்கு உள்ளான பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ளமை தனித்துவமான நிலைமையாகும்.

சில மாதங்களுக்கு முன்னர், வறட்சியின் போது, குருநாகல் புறநகர் பகுதிகளுக்கு காட்டு யானைகள் வருகை தந்ததாகவும், அங்கு காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்ததாகவும் செய்திகள் வெளியாகின.

அதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் இப்பாகமுவ பிரதேசத்தில் பல நாட்களாக காட்டு யானைகள் சுற்றித்திரிந்தன.

குருநாகல் மாவட்டத்திற்குட்பட்ட மஹவ கல்வி வலயத்திலுள்ள 86 பாடசாலைகள் யானை அச்சுறுத்தல் உள்ள இடங்களுள் காணப்படுவதாகவும் மேலும் 38 பாடசாலைகள் யானைகள் அதிகம் காணப்படும் பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் வடமேற்கு மாகாண கல்விப் பணிப்பாளர் முதிதா ஜயதிலக்க தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக நிகவெரட்டிய கல்வி வலயத்தில் 57 பாடசாலைகள் யானை அச்சுறுத்தல் உள்ள பிரதேசங்களில் அமைந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட 32 பாடசாலைகள் யானைகளினால் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கும் அபாயகரமான பிரதேசங்களில் அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய மாகாண பணிப்பாளர் மேலும் 23 பாடசாலைகளுக்கு காட்டு யானைகள் வருகை தருவதாக அவர் தெரிவித்தார்.

காட்டு யானைகளின் அச்சுறுத்தல் இருந்த போதிலும் பாடசாலை ஊழியர்களுக்கோ அல்லது அந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

எனினும், காட்டு யானைகளின் தாக்குதலினால் பல பாடசாலைகளின் பௌதீக வளங்கள் சேதமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# மட்டக்களப்பு சந்திவெளி பகுதியில் பாம்பு தீண்டி 12 வயது சிறுவன் பலி!

மட்டக்களப்பு, ஒக். 06

**மட்டக்களப்பு சந்திவெளி பகுதியில் பாம்பு தீண்டி 12 வயது பாடசாலை மாணவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.**

**வந்தாறுமூலை விஷ்ணு வித்தியாலயத்தில் எட்டாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவனான கந்தசாமி டிலக்ஷன் என்ற மாணவனே பாம்பு தீண்டி உயிரிழந்தவராவார்.**

பாடசாலை விடுமுறை நாட்களில் தனது பெரியப்பாவின் சந்தனமடு ஆறு பிரதேசத்தில் உள்ள தோட்டத்துக்கு சென்று தங்கி நின்று வீடு திரும்பும் இவர், கடந்த சனிக்கிழமை பெரியப்பாவுடன் சந்தனமடு ஆறு தோட்டத்துக்கு சென்று ஞாயிறன்று கடும் மழை பெய்ததால் வீடு திரும்ப முடியாமல் அங்கேயே இருந்துள்ளார்.

திங்கட்கிழமை இரவு 09.00 மணியளவில் தோட்டவாடியில் உறங்கிக்கொண்டிருந்த இவருக்கு திடீரென வயிற்று நோவுடன் வாந்தியும் ஏற்பட பெரியப்பா மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலைக்கு தனது மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்று அனுமதித்தார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை உயிரிழந்தார்.

தந்தை தனது பிள்ளைக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லையென திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ். எம்.நஸீரிடம் தெரிவித்ததால் மரணத்திற்கான காரணத்தை கண்டறிய பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மரண விசாரணையில் மாணவனின் வலது காலின் மேல் பாகத்தில் பாம்பு தீண்டியதால் குருதியோட்டத்தில் நஞ்சு கலந்து இதயம் செயலிழந்து மரணித்திருப்பது கண்டறியப்பட்டது.

பின்னர் சடலம் மாணவனின் பெற்றோரிடம் நல்லடக்கத்திற்காக ஒப்பபடைக்கப்பட்டது.

# கல்முனையில் சிறுவர் தின ஊர்வலம்




கல்முனை, ஒக். 06

“எல்லாவற்றிலும் பெறுமதியானவர்கள் சிறுவர்கள்” எனும் தொனிப்பொருளிற்கமைவாக இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் சிறுவர் தின ஊர்வலம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாடசாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் வலயக்கல்வி அலுவலகம் ஊடாக கல்முனை சந்தையினை அடைந்து, கல்முனை பிரதான வீதியூடாக கல்முனை சதுக்கத்தை அடைந்து இஸ்லாமாபாத் வழியாக பாடசாலையை அடைந்தது. இதில் பங்கேற்ற மாணவர்கள் சிறுவர் உரிமை, சிறுவர் துஷ்பிரயோகம், கல்வி, போதைவஸ்துப் பாவனை தொடர்பான பதாகைகள் ஏந்தியவண்ணம் காணப்பட்டனர்.

இவ்வூர்வலத்தில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் கல்முனை வர்த்தக சங்க உறுப்பினர்களால் தாகசாந்தி ஏற்பாடுகள் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரியில் நுகர்வோர் அதிகார சபையால் விழிப்புணர்வு






அம்பாறை, ஒக். 06

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது பாவனையாளர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்மந்தமாக மாணவர்களுக்கு தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

இவ் விழிப்புணர்வு நிகழ்சிக்கு பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி இஷட். எம் ஸாஜீத் மற்றும் புலன் விசாரணை அதிகாரி ஏ.ஏ.ஏ ஸர்பான், என்.எம் றிப்கான்,ஏ.பீ.எம் றிப்சாத் ஆகியோருடன் கல்லூரியின் விரிவுரையாளார்களும் கலந்து கொண்டனர்.

(அ)

# உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலயத்திற்கு உதவிகள்



அம்பாறை, ஒக். 06

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலய அதிபர் எம்.எச். எஸ்.ஆர்.மஜீதியா தலைமையில் சிறுவர் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.சி.என். சபானா, லயன்ஸ் கழகத்தின் பிராந்தியப் பணிப்பாளர் மற்றும் பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளருமான பொறியியலாளர் எம்.ரீ.எம்.அனாப் , கௌரவ அதிதிகளாக லயன்ஸ் கழக வலயப் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான எம்.பி.எம்.பௌசான், சம்மாந்துறை லயன்ஸ் கழக தலைவர் ஏ.ஜே.எம்.றாபி உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், கலந்து சிறப்பித்தனர் .

மேலும் இந்நிகழ்வில் 725 மாணவர்களுக்கும் 80,000 ரூபாய் பெறுமதியான அன்பளிப்பு பொருட்கள் உட்பட பாடசாலைக்கு 21 ஆயிரம் பெறுமதியான 05 குப்பை தொட்டிகள் அதிதிகளால் பாடசாலைக்கு அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலையின் ஒவ்வொரு மாணவர்களின் கையெழுத்து சஞ்சிகை தொகுப்பு வெளியீடும் ஆங்கில அலகு ஒன்றும் பிரதம அதிதிகளினால் திறந்துவைக்கப் பட்டது.

(அ)

# தரம் உயர்த்தப்பட்ட சம்மாந்துறை செந்நெல் கிராம வைத்தியசாலை



கல்முனை, ஒக். 06

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட சம்மாந்துறை செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவு பிரதேச வைத்தியசாலையாக சுகாதார அமைச்சினால் தரம் உயர்த்தப்பட்டமைக்கமைவாக வைத்தியசாலையை உத்தியோகபூர்வவமாக திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் சரசி பிரார்த்தனா விஜயசூரிய தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் பிரதம அதிதியாகவும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் கௌரவ அதிதியாகவும், பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எம்.பீ. அப்துல் வாஜித், திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் ஹஎம்.சீ.எம்.மாஹிர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும், கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான மருத்துவர் எம்.ஏ. நபீல், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் வை.பீ.ஏ.அஸீஸ் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின்போது வைத்தியசாலைக்குத் தேவையான அம்புலன்ஸ் வண்டி மற்றும் தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

(அ)

# இம்ரான்கான் மெதுவாக கொல்லும் விஷம் வைத்துக் கொல்லப்படலாம்

## அச்சம் வெளியிடுகிறார் வழக்கறிஞர்

**இஸ்லாமாபாத், ஒக். 06**

**பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மெதுவாக கொல்லும் விஷம் மூலம் கொல்லப்படலாம் என அவரின் வழக்கறிஞர் அச்சம் தெரிவித்துள்ளார்.**



பாகிஸ்தான் நாட்டின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், 'தோஷகானா' ஊழல் வழக்கில் கடந்த ஒகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் இம்ரான் கானின் வழக்கறிஞர் நயீம் பஞ்சுதா, அவரை சிறையில் சென்று சந்தித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நயீம், இம்ரான் கானின் உயிருக்கு சிறையில் அச்சுறுத்தல் உள்ளது-என்றார்.

இம்ரான் கானின் உணவில் விஷம் கலந்து கொடுக்கப்படலாம் என அச்சம் தெரிவித்த அவர், சிறையில் இம்ரான் கான் மனரீதியாக தொல்லைக்கு உள்ளாக்கப்படுவதாக குற்றம் சாட்டினார்.

இம்ரான் கானின் நடமாட்டத்தை சிறை அதிகாரிகள் தடுப்பதாகவும், சிறிய அறைக்கு அவரை மாற்றி உள்ளதாகவும் கூறிய நயீம், சிறையிலேயே இம்ரான் கானை கொல்ல சதி நடப்பதாக அவரது மனைவி புஸ்ரா பீவி கவலை தெரிவித்ததாக கூறினார். (அ)

# உக்ரைன் ஜனாதிபதி ஸ்பெயினுக்கு விஜயம்



*மட்ரிட், ஒக். 06*

உக்ரைன் ஜனாதிபதி வெளோடிமிர் ஜெலன்ஸ்கி ஸ்பெயினின் கிரனடா நகருக்கு சென்றுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அது ஐரோப்பிய அரசியல் சமூக மாநாட்டில் பங்கேற்கும் நோக்கத்தில் அவர் விஜயம் செய்துள்ளார்.

குறித்த ஐரோப்பிய அரசியல் சமூக மாநாடு ரஷ்ய படையெடுப்பிற்குப் பிறகு 40 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை உருவாக்க நிறு வப்பட்டது.

கியேவுக்கு தொடர்ந்து உதவி செய்யும் அமெரிக்க கொள்கை பாதிப்பை ஏற்படுத்தும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அச்சம் தெரிவித்ததை அடுத்து, கிரனடாவிவில் கூடிய ஐரோப்பிய தலைவர்கள் உக்ரைனுக்கு நீண்ட கால ஆதரவை வழங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறந்த நகரமாக லண்டன் அறிவிப்பு!



*லண்டன், ஒக். 06*

2023ஆம் ஆண்டின் உலகின் சிறந்த நகரமாக லண்டன் அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றுலா மற்றும் ரியல் எஸ்டேட் ஆலோசனை சேவை நிறுவனம் இது குறித்த ஆய்வை நடத்தி அதன் முடிவை வெளியிட்டுள்ளது.

விமான நிலைய இணைப்பு, பூங்காக்களின் எண்ணிக்கை, உணவகங்கள், கல்வி நிலையங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் திரையரங்குகள் போன்ற பல காரணிகளை கணக்கில் எடுத்து கொண்டு இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

லண்டனுக்கு அடுத்து இரண்டாமிடத்தில் பிரான்ஸின் பாரீஸ் நகரமும், மூன்றாவது இடத்தில் அமெரிக்காவின் நியூ யோர்க் நகரமும் உள்ளன.

2023ஆம் ஆண்டி சிறந்த நகரங்கள் மற்றும் 2024ல் சிறப்பாக இருக்கும் என கருதப்படும் டாப் 10 நகரங்கள்

லண்டன் (பிரித்தானியா)
பாரீஸ் (பிரான்ஸ்)
நியூ யோர்க் (அமெரிக்கா)
டோக்கியோ (ஜப்பான்)
சிங்கப்பூர்
டுபாய் (ஐக்கிய அரபு அமீரகம்)
சான்பிரான்ஸிஸ்கோ (அமெரிக்கா)
பார்சிலோனா (ஸ்பெயின்)
ஆம்ஸ்டர்டாம் (நெதர்லாந்து)
சியோல் (தென் கொரியா) (அ)

# பாகிஸ்தானில் அனுமதியில்லாமல் தங்கியுள்ள 17 இலட்சம் ஆப்கானியர்கள் வெளியேற உத்தரவு

*இஸ்லாமாபாத், ஒக். 06*



பாகிஸ்தானில் அனுமதியில்லாமல் தங்கியுள்ள 17 இலட்சம் ஆப்கானிஸ்தான் அகதிகள் வெளியேற அந்நாட்டு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானுடனான எல்லைப் பகுதியில் அதிகரித்து வரும் பயங்கரவாத தாக்குதல்களுக்கு அந்நாட்டிலிருந்து வந்தவர்கள் தான் காரணம் என பாகிஸ்தான் அரசாங்கம் குற்றம் சாட்டி வருகிறது.

இதற்கிடையே தான் ஆப்கானிஸ்தான் அகதிகள், பாகிஸ்தானில் இருந்து வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

தற்போது உரிய ஆவணங்களின்றி பாகிஸ்தானில் 17 இலட்சம் ஆப்கானிஸ்தான் நாட்டவர்கள் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அவர்கள் அனைவரையும் வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடந்து வரும் நிலையில் அங்கிருந்து ஏராளமானோர் அகதிகளாக அண்டை நாடான பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்து வருகிறார்கள்.

பாகிஸ்தானின் இந்த அறிவிப்புக்கு தலிபான்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்த தீர்மானத்தை பாகிஸ்தான் அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தலிபான்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வாரம் மஸ்தூங் நகரில் நடந்த மத நிகழ்ச்சியில் தற்கொலைப்படை தாக்குதல் நடந்த நிலையில் இதுபோன்ற தாக்குதல்கள் நடத்தும் தீவிரவாதிகளுக்கு தலிபான்கள் புகலிடம் அளிப்பதாக பாகிஸ்தான் அரசாங்கம் குற்றம்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# திருநங்கைகளை அவமதித்தாரா சுனக்?

## உரையால் சர்ச்சை

*லண்டன், ஒக். 06*

பிரித்தானியாவின் பிரதமர் ரிஷி சுனக், திருநங்கைகள் குறித்த தனது சமீபத்திய கருத்துகளால் சமூக வலைதளங்களில் விவாதத்தை கிளப்பியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற கன்சர்வேடிவ் கட்சி மாநாட்டில் தனது நிறைவு உரையின்போது,

பாலின விவாதம் குறித்த தனது நிலைப்பாட்டை அவர் பகிர்ந்து கொண்டார், மேலும் "ஒரு ஆண் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் ஒரு பெண்" என்று கூறினார்.

"மக்கள் தாங்கள் விரும்பும் பாலினமாக இருக்கலாம் - அவர்களால் முடியாது என்று நம்புவதற்கு நாம் கொடுமைப்படுத்தப் படக்கூடாது. ஒரு ஆண் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் ஒரு பெண். அது சாதாரண பொது அறிவு" என்று குறிப்பிட்டார்.

"நாங்கள் இந்த நாட்டை மாற்றப் போகிறோம், அதாவது, வாழ்க்கை என்பது வாழ்க்கை. அது ஒரு சர்ச்சைக்குரிய நிலைப்பாடாக இருக்கக்கூடாது.

கடின உழைப்பாளிகளில் பெரும்பாலோர் அதை ஒப்புக் கொள்கிறார்கள். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் உறவுகளைப் பற்றி பள்ளியில் என்ன கற்றுக் கொள்கிறார்கள் என்பதை அறிவது சர்ச்சைக்குரியதாக இருக்கக் கூடாது.

வைத்தியசாலைகளில் கூட ஆண்கள் அல்லது பெண்களைப் பற்றி பேசும்போது நோயாளிகள் தெரிந்து கொள்ள வேண்டும்," என்று அவர் மேலும் கூறினார்.

சிலர் அவரது கருத்தை ஆதரித்தாலும், திருநங்கைகளை அவமதிக்கும் வகையில் கருத்து தெரிவித்ததற்காக பலர் கோபமடைந்தனர்.

அவருடைய கருத்துக்கள் "பொது அறிவுக்கு" வெகு தொலைவில் இருப்பதாக சிலர் அவரை கேலி செய்தனர்.



பிரதமராக ரிஷி சுனக் நடத்திய முதல் மாநாடு இதுவாகும்.

அவரது பேச்சைக் கேட்பதற்கு முதல் தரவரிசைப் பிரதிநிதிகள் வரிசையில் நின்று கொண்டிருந்தாலும், சில பங்கேற்பாளர்கள் குறைந்தபட்சம் அது அவருடைய கடைசி நிகழ்வாக இருக்க வாய்ப்புள்ளது என கருத்து வெளியிட்டுள்ளனர். (அ)

# ஆறு மாதங்களுக்கு தேவையான மருந்து வகைகள் கையிருப்பில்!

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்

**கொழும்பு, ஒக். 06**

**சுகாதாரத்துறை தொடர்பில் பத்திரிகைகளில் சிலர் தெரிவிக்கும் கருத்துக்கள் தற்போது மட்டுமின்றி, எதிர்காலத்திலும் அந்தத் துறையில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துமென சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**



ஆறு மாதங்களுக்கு தேவையான மருந்து வகைகள் கையிருப்பில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, நோயாளர் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு செல்வது குறைவடைந்துள்ளதாக பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், கொழும்பில் பிரதான வைத்தியசாலைகளின் வெளி நோயாளர் பிரிவுகளில் மாத்திரம் நோயாளர் வருகை 49 வீதத்தால் அதிகரித்துள்ளது. நாடளாவிய ரீதியில் இது 42 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான்கு நாட்களுக்கு முன்பதாகவே நான் இது தொடர்பில் அறிந்து கொண்டேன். உடனடியாகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினேன். அதனையடுத்து நாட்டிலுள்ள அனைத்து ஊடகங்களையும் அழைத்து, அது தொடர்பில் தெளிவுபடுத்தினேன்-என்றார்.

# நீதிபதி பதவி விலகல் பின்னணியில் சூழ்ச்சி

## அமைச்சர் அமரவீர

கொழும்பு, ஒக். 06

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பதவி விலகலின் பின்னணியில் நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் சூழ்ச்சி இருக்கலாம். அது பற்றியும் தேடிபார்க்க வேண்டும்." - என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி நாட்டைவிட்டு வெளியேறியுள்ள சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணையை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அதேபோல பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சும் சி.ஐ.டி ஊடாக தனியான விசாரணையை முன்னெடுத்துவருகின்றது.

தனக்கு அச்சுறுத்தல் இருந்திருந்தால் பொறுப்புவாய்ந்த பதவியில் இருந்த நீதிபதி அது குறித்து முறைப்பாடு செய்திருக்க வேண்டும். அவர் அவ்வாறு எந்தவொரு முறைப்பாட்டையும் முன்வைக்கவில்லை. நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கும் தெரியப்படுத்தவில்லை. எனவே, இங்கு பாரிய சூழ்ச்சி இருப்பது தெளிவாகின்றது.

அவர் வெளிநாடு செல்வதற்கு முன்னர் மேற்குல நாடுகளின் இராஜதந்திரிகள் இருவரை சந்தித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. நீதிபதிக்கு எதிராக அவரின் மனைவியால் முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது. எனவே, அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறினாரா அல்லது தான் செய்த குற்றங்களில் இருந்து விடுபடுவதற்காக நாட்டைவிட்டு ஓடினாரா என்பது குறித்தும் ஆராய வேண்டும்.

இங்கு சூழ்ச்சி உள்ளதா, இதன் பின்னணியில் எதிரணி தொடர்புபட்டுள்ளதா, நாட்டை அபகீர்த்திக்கு உட்படுத்தும் முயற்சியா இது என்ற சந்தேகம் எமக்கு உள்ளது. உண்மை கண்டறியப்பட வேண்டும்.

88 -89 காலப்பகுதியிலும் நீதிபதி ஒருவர் நாட்டைவிட்டு வெளியேறினார். எனவே, இது முதல் சந்தர்ப்பம் அல்ல. அன்று நீதிபதிகள் சாதாரண காரணத்தை வெளியிட்டனர். இவர் வெளியிடவில்லை-என்றார்.

(அ)

# முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் சிறுவர்கள், முதியோர் தின நிகழ்வு!





முல்லைத்தீவு, ஒக். 06

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை சிரேஷ்ட போதனாசிரியர் திருமதி. கணேஸ்வரி இராஜசிங்கம் கலந்து சிறப்பித்தார்.

இந் நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் (காணி) எஸ்.குணபாலன், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட பிரதம கணக்காளர், மாவட்ட உள்ளகக் கணக்காய்வாளர், உதவி மாவட்ட செயலாளர், கௌரவ விருந்தினர்கள், சிறுவர்கள், முதியவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# கேரள கஞ்சா பொதியுடன் மன்னாரில் பெண் கைது!

மன்னார், ஒக். 06

பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள காட்டாஸ்பத்திரி கிராம பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பொதியுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேசாலை இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் குறித்த வீட்டுக்குச் சென்று சோதனையை முன்னெடுத்தனர்.

இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா பொதியை மீட்டனர்.

அந்தப் பொதியில் சுமார் 2 கிலோ 300 கிராம் கேரள கஞ்சா இவ்வாறு மீட்கப்பட்டது. இதன்போது குறித்த வீட்டில் இருந்த 44 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா பொதி யுடன் கைது செய்யப்பட்ட பெண் பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

பேசாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)



# கலாசாலையில் நூற்றாண்டு கால சிறப்புரை உயிரியல்பாட ஆசான் குணசீலன் ஆற்றினார்





யாழ்ப்பாணம், ஒக். 06

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்றுவரும் நூற்றாண்டு விழா கால சிறப்புரை தொடரில் கடந்த புதன் கிழமை கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் இலங்கையின் மூத்த உயிரியல் பாட ஆசானுமாகிய வ.சி. குணசீலன் கல்வியில் 4.0 என்ற பொருளில் உரையாற்றினார்.

கலாசாலையின் அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இரண்டாம் வருட உடற்கல்விநெறி ஆசிரிய மாணவர்கள் சார்பில் ஸ்ரீசக்தி ரம்மியராகுலன் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

ஆசிரிய மாணவர் வி.விசிதரன் ஆசிரியத்துவம் என்ற பொருளில் உரை ஆற்றினார்.

நிகழ்வில் அதிதி அறிமுக உரையினை கலாசாலையின் விரிவுரையாளர் த.தவசேகர் வழங்கினார். சிறப்புரை ஆற்றிய ஓய்வுநிலை விரிவுரையாளர் குணசீலனை கலாசாலையின் அதிபர் மற்றும் முகாமைத்துவ குழுவினர் பொன்னாடை அணிவித்தும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவித்தனர்.

(அ)

## நாட்டை...

ஒன்றாக இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம்.

ஏன் எங்களுக்கு இணைந்து செயல்பட முடியாது? அத்துடன், நாடு தற்போது நெருக்கடியான நிலைமையில் இருக்கின்றது.

இந்த நேரத்தில் இரண்டு தரப்பினரும் ஒன்றிணைந்தே நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும் எங்கள் அனைவருக்கும் ஒரே அச்சுறுத்தலே உள்ளது.

அதில் இருந்து மீள்வதற்கு வேறு வேலைத்திட்டங்கள் இருக்குமாக இருந்தால் அதனைக் கூறுங்கள். ஆனால், யாரும் வேலைத்திட்டங்களை முன்வைக்கவில்லை. தற்போதைய கொள்கைத் திட்டங்களை இரண்டு தரப்பிலும் உள்ளவர்கள் ஏற்றுக்கொள்வதால் இரண்டு தரப்பினரும் ஒன்றாக வேலை செய்து நாட்டுக்குக் காட்டுவோம் - என்றார். (ஐ)

## வரிகள்...

- என்றார்.

மேலும், சில விடயங்களுக்குத் தீர்வை கண்டதும் பணியாளர் மட்ட உடன்பாடு சாத்தியமாகலாம். நிதி அமைச்சு சில வரிகளை அதிகரிக்கலாம் என்பதால் சில பொருட்களின் விலைகளும் அதிகரிக்கலாம் - என்றும் கூறினார். (ஐ)

## கடன்...

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பணவீக்கம் குறைவடைவது பொருட்களின் விலைகள் நிலை யாக காணப்படுவதையே குறிக்கும் எனவும் பொருட்களின் விலைகள் குறைவடைவதை இது வெளிப் படுத்தாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நாகபட்டினம்...

சிறுதுறைமுகங்கள் அமைச்சர் ஏ.வி. வேலு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இராமேஸ்வரம் - தலைமன்னார் ஆகிய இடங்களுக்கு இடையே கப்பல் சேவையை புதுப்பிக்கவும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

## கொக்குத்...

இந்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மேலதிக மாவட்ட செயலர் க. கனகேஸ்வரன் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுக்கு 56 இலட்சம் ரூபாய் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டது. இதில், பந்தல், மலசலகூடம் அமைப்பதற்காக 20 இலட்சம் செலவிடப்பட்டது. அகழ்வில் ஈடுபடும் ராஜ் சோமதேவ தலைமையிலான குழு வுக்கான கொடுப்பனவுகள் வழங்கப் பட்டுவிட்டன. சட்ட மருத்துவ அதிகாரிகளுக்கான கொடுப்பனவு வழங்க வேண்டியுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

ஒதுக்கப்பட்ட 56 இலட்சம் ரூபாயில் 26 இலட்சம் ரூபாயே இதுவரை செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள நிதி மூலம் இன்னும் ஒரு வார காலத்துக்கு அகழ்வு பணிகளை மேற்கொள்ள முடியும் - என்றார்.

முன்னதாக, கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வு பணிக்குரிய நிதி இல்லை என முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் நேற்று முன்தினம் புதன்கிழமை தன்னிடம் தெரிவித்தார் என்றும் ஏற்க னவே அகழ்வுப்பணிகள் மேற்கொண்டமைக்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும் முல்லைத்தீவு சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசு தேவா தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 2024 பட்ஜெட்டுக்கு...

இதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட விவகாரம் வருமாறு,

பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்கு 56 ஆயிரத்து 445 கோடியே 85 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, அவரின் கீழ் உள்ள அமைச்சுக்களுக்கு ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 711 கோடியே 61 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று பிரதமரின் கீழுள்ள அமைச்சுகளுக்கு 88 ஆயிரத்து 726 கோடியே 50 இலட்சம் ரூபாயும், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு 88 ஆயிரத்து 611 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு 451 கோடியே 50 இலட்சம் ரூபாயும், கிழக்கு மாகாணத்துக்கு 522 கோடியே 50 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு ஆயிரத்து 60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோல, பௌத்தத்துக்கு 166 கோடி ரூபாயும், இந்து மதத்துக்கு 28 கோடியே 30 இலட்சம் ரூபாயும் கிறிஸ்தவ விவகாரங்களுக்கு 21 கோடி ரூபாயும், இஸ்லாமிய விவகாரங்களுக்கு 18 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

நிதி, பொருளாதார உறுதிப்பாட்டுக்கு 72,343 கோடியே 14 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய், வெகுசன ஊடக அமைச்சுக்கு 255 கோடி ரூபாய், நீதி, சிறைச்சாலைகள் அமைச்சுக்கு 412 கோடியே 51 இலட்சம் ரூபாய், சுகாதார அமைச்சுக்கு 41 ஆயிரத்து 28 கோடியே 99 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய், வெளிவிவகார அமைச்சுக்கு 1,961 கோடியே 20 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சுக்கு 231 கோடியே 90 இலட்சம் ரூபாய், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 4 ஆயிரத்து 36 கோடியே 84 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளன.

கமத்தொழில் அமைச்சுக்கு 10 ஆயிரத்து 42 கோடியே 32 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு 4 ஆயிரத்து 298 கோடியே 30 இலட்சம் ரூபாய், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சுக்கு ஆயிரத்து 917 கோடியே 47 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு 4 ஆயிரத்து 245 கோடி ரூபாய், கல்வி அமைச்சுக்கு 23 ஆயிரத்து 705 கோடி ரூபாய், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு ஆயிரம் கோடி ரூபாய், கைத்தொழில் அமைச்சுக்கு 910 கோடியே 83 இலட்சம் ரூபாய், கடற்றொழில் அமைச்சுக்கு 700 கோடி ரூபாய், சுற்றாடல் அமைச்சுக்கு 213 கோடி ரூபாய், வனசீவராசிகள் அமைச்சுக்கு 871 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கு 726 கோடி ரூபாய், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுக்கு 7,453 கோடியே 40 இலட்சம் ரூபாய், துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானச்சேவைகள் அமைச்சுக்கு 707 கோடியே 50 இலட்சம் ரூபாய், தொழில் நுட்பம் மற்றும் முதலீட்டு அமைச்சுக்கு 542 கோடியே 68 இலட்சம் ரூபாய், முதலீட்டு மேம்பாடு அமைச்சுக்கு 339 கோடியே 76 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கு 689 கோடியே 80 இலட்சம் ரூபாய், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சுக்கு 1,050 கோடி ரூபாய், நீர்ப்பாசன அமைச்சுக்கு 8,395 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளன. (ஐ)

# "பண்ணையாளர் பிரச்னையை தீர்க்காமல் ஜனாதிபதி மட்டு. வந்தால் தகுந்த மரியாதை"

கொழும்பு, ஒக். 06

பண்ணையாளர்களின் பிரச்னையை தீர்க்காமல் ஜனாதிபதி மட்டக்களப்புக்கு வருவாராக இருந்தால், அங்கே அவருக்கு தகுந்த வரவேற்பு கிடைக்கும் இவ்வாறு தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் நேற்று அவர் ஆற்றிய உரையில்,

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மட்டக்களப்பு வரவுள்ளார். மயிலத்தமடு பண்ணையாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் மேய்ச்சல்தரை பெரும் பான்மை இனத்தவர்களால் ஆக்கிர மிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரசினைக்கு தீர்வு காணப்படும் வரையில் போராட் டம் தொடரும். இல்லாவிட்டால் இதன் விளைவுகளை மட்டக்களப்பு வரும் போது ஜனாதிபதி பார்க்கக்கூடியதாக இருக்கும். ஜனாதிபதி மட்டக்களப்புக்கு வர முதல் இதனை தீர்க்காவிட்டால் ஜனாதிபதிக்கு வழங்க வேண்டிய கௌர வத்தை நாங்கள் வழங்குவோம் - என்றார்.

## தலைமன்னார்...

நீங்கள் மன்னார் பகுதிக்கு சென்று நேரடியாக நிலைமைகளை பார்வையிட்டீர்கள். அந்த வகையில் அது தொடர்பில் மேற்கொண்டுள்ள இருக்கும் முன்னோடி நடவடிக்கைகள் என்ன- என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த நிமால் சிறீபால டிசில்வா,

தற்போது தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தலைமன்னாரில் ஏற்கனவே, காணப்பட்ட இறங்குதுறை உபகரணங்கள் மற்றும் பகுதிகள் அழிவடைந்துள்ளன. அவை திருத்தப்பட வேண்டும்.இதற்காக 60 கோடி ரூபாயை பட்ஜெட்டில் பெற யோசனையை முன்வைத்துள்ளேன்.

அத்துடன், எதிர்வரும் 16ஆம் திகதி நான் இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளேன். அங்கு கப்பல் துறை அதிகார சபை உள்ளிட்ட அதிகாரிகளுடன் அது தொடர்பில் பேச்சு நடத்துவேன். இந்த கப்பல் சேவையை நடத்துவதில் அங்குள்ள தரப்பினரும் தயாராக வேண்டியுள்ளது அந்த நடவடிக்கைகள் முடிவுற்றதும் இந்த கப்பல் சேவையை ஆரம்பிக்க முடியும் - என்றார். (ஐ)

## ஐ.எம்.எவ்....

நாடுகளிடமிருந்து உத்தரவாதங் களை முக்கிய நிபந்தனையாக விதித்துள்ள சர்வதேச நாணய நிதியம் முதலாவது நிதி உதவி குறித்த மறுஆய்வில் இலங்கை சித்திபெறவில்லை என குறிப்பிட்டுள்ளதுடன் இலங்கைக்கான 33 கோடி டொலர் நிதி உதவியை வழங்குவதை தாமதித்துள்ளது.

புதிய பட்டுப்பாதை திட்டத்தின் பத்தாவது வருடத்தை குறிக்கும் நிகழ்வுகளுக்காக இலங்கை ஜனாதிபதி இந்த மாதத்தின் இரண்டாவது வாரத்தில் சீனா செல்கிறார். இதனால், இலங் கைக்கு நிவாரணம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன என தெரிவித்துள்ள அந்த ஊடகம் கடன் நிவாரணம் குறித்த பேச்சுகளுக்காக இலங்கை ஜனாதிபதி சீன ஜனாதிபதியை சந்திப்பார் எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 330 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்ட பின்னர் இலங்கையின் செயற்பாடுகளை ஆராய்ந்த பின்னரே மேலும் நிதியை வழங்குவது குறித்து தீர்மானிக்க முடியும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருந்தது.

இந்த நிதி மறுஆய்வுகளின் போது கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படும் திட்டத்தின் கடன் இலக்குகளின் அடிப்படையில் அது பூர்த்தி செய்யப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் இலங்கை செயற்பட்டுள்ளதா என்பது குறித்து கவனம் செலுத்தப்படும் என இலங்கைக்கான சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீட்டர் புருவர் தலைமையிலான குழுவினர் தெரிவித்துள்ளனர் என நிக்கே ஏசியா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான வெளிநாட்டுக் கடன் கூட்டமைப்பை ஏற்படுத்துவ தற்காக இலங்கைக்கு கடன் வழங்கிய ஜப்பான், இந்தியா, பிரான்ஸ் தலைமை யிலான குழுவில் சீனாவையும் இணைந்து கொள்ளுமப்படி இலங்கை வேண்டுகோள் விடுத்தது. எனினும் சீனா அதனை நிராகரித்துவிட்டது. மேலும் இலங்கையுடன் நேரடியாக இந்த விடயத்தை கையாள்வதாக சீனா தெரிவித்திருந்தது. (ஐ)

## நீதி உடைந்த இலங்கைக்கு...

பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடரின் பக்க நிகழ்வு ஒன்றில் நேற்று வியாழக்கிழமை ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வியன்னா பிர கடனமும் அதன் செயல்முறைகளும் தொடர்பாக 27ஆவது பத்தி கூறுகிறது, "நீதி நிர்வாகத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு முறையாக நிதியளிக்கப்பட வேண்டும். மேலும் சர்வதேச சமூகத்தால் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளின் அதிகரித்த அளவு வழங்கப்பட வேண் டும்." எவ்வாறாயினும், கடந்த வாரம் இலங்கையில் தமிழ் நீதிபதி ரி. சரவண ராஜா, "எனது உயிருக்கு அச்சுறுத்தல் மற்றும் மன அழுத்தம் காரணமாக" தனது அனைத்து உத்தியோகபூர்வ பணிகளையும் ராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளி யேறினார்.

சிங்கள பெரும்பான்மையினருக்குள் உள்ள பௌத்த தீவிர போக்குக் கொண்ட மதவாத, இனவாத சக்திகளை எரிச்சலூட்டுவதாகக்கூறி அவர் பிறப்பித்த உத்தரவை மாற்றுமாறு நாட்டின் சட்டமா அதிபரால் அழுத்தம் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் அழுத்தமும் இதில் அடங்கும்.

போர் குற்றவாளி என சந்தேகிக்கப்படும் அரசாங்க எம்.பி ஒருவர், உயரிய சபையில் அடிக்கடி இலங்கை சிங்கள பௌத்த நாடு என்றும், தமிழ் நீதிபதி தனது இடத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் எச்சரித்து பாராளுமன்றத்தில் மேற்படி நீதிபதியை வெளிப்படையாவே மிரட்டினார்.

அதே பாராளுமன்ற உறுப்பினர் தேசிய பாதுகாப்பு துறை தொடர்பான பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவின் தற்போதைய தலைவராகவும் உள்ளார்.

நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்ட எனது சக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் அரசாங்க ஆதரவு குண்டர்களால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டார்.

இது நடைபெற்ற போது பொலிஸார் அங்கு பார்த்துக் கொண்டிருந்தனர். பொலிஸார் நடவடிக்கை எடுக்காமல் இருந்த நிலையில், பின்னர் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக, இறுதியில் 6 பேரை கைது செய்து, அடுத்தடுத்த நாட்களில் நீதிமன்றத்துக்கு சென்று "இனக் கலவரங்களை" தடுப்பதற்கு சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்க வேண்டும் என்று காரணம் காட்டி விடுவித்திருந்தனர்.

சரியான சீர்திருத்தங்களை வலியுறுத்தாமல், உடைந்த நீதி நிர்வாக முறைமை கொண்ட இலங்கையைப் போன்று ஒரு நாட்டுக்கு நிதியளிப்பது நிறுவன மயப்பட்ட அநீதியை நிலைநாட்டுவதாகவே அமையும் - என்றும் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கடந்த 48 மணிநேரத்தில் நாட்டில் 5 சிறுவர் உட்பட 11 பேர் மாயம்!

## சபையில் சஜித் பிரேமதாஸ தகவல்

கொழும்பு, ஒக். 06

**நாட்டில் கடந்த 48 மணிநேரத்தில் மாத்திரம் 11பேர் காணாமற்போயுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

**நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

கடந்த 48 மணிநேரத்தில் மணிநேரத்தில், மாத்திரம் 11 பேர் காணாமற்போயுள்ளனர். அவர்களில் 5 பேர் சிறுவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யு.என்.டி.பி. தனது அறிக்கையொன்றில், இந்நாட்டில் 10 பேரில் 6 பேர், ஆபத்தான நிலையில் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது. அதாவது 220 இலட்சம் மக்களில் 123 இலட்சம் மக்கள் ஆபத்தான நிலைமையில் உள்ளனர். ஆனால் இந்த அரசாங்கமோ நாட்டில் எந்தவொரு பிரச்னையும் இல்லை என்பதுபோல தான் செயற்பட்டு வருகின்றது.

நாட்டில் மின்சாரக்கட்டணம், எரிபொருள் கட்டணம், எரிவாயு கட்டணம் என அனைத்தையும் தற்போது உயர்த்தியுள்ளது.

இந்த நிலையில், எப்படி எங்களை ஒன்றாக இணைந்து செயற்படுமாறு நீங்கள் அழைக்க முடியும்?

மனச்சாட்சியுடன்தானா நீங்கள் செயற்படுகின்றீர்கள்.

அதுமட்டுமல்லாது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜேர்மன் தொலைக்காட்சிக்கு அண்மையில் வழங்கிய நேர்க்காணலில், சர்வதேச விசாரணையொன்று தேவையில்லை எனத் தெரிவித்துள்ளார்.

எனினும், ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தில் சர்வதேச விசாரணையொன்றுக்கு செல்வோம் என அவர் தான்



அன்று கூறியிருந்தார்.

அவர் பதவியில் இல்லாதபோது சர்வதேச விசாரணை அவசியம் என்று கூறிவிட்டு, தற்போது ஜனாதிபதியான பின்னர் எப்படி அதனை வேண்டாம் எனக் கூறமுடியும்?

நாட்டிலுள்ள பெரும்பாலோனோருக்கு உள்ளகப் பொறிமுறையின் கீழ் நம்பிக்கையில்லை. எமக்கும் நம்பிக்கையில்லை.

இதனால்தான் சர்வதேச விசாரணைக்கு செல்ல வேண்டும் என நாமும் வலியுறுத்துகிறோம். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக புதிய விசாரணையொன்று அவசியமாகும். இதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

அதுமட்டுமல்லாது வைத்தியர் விராஜ் பெரேரா, போதைப்பொருள் கேந்திர நிலையமாக இந்நாடு மாறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், சொம்பி எனும் புதிய போதைப் பொருள் ஒன்று வந்துள்ளதாகவும், அதனை பயன்படுத்தினால் சொம்பிகளைப் போல செயற்படவார்கள் என்றும் தெரிவித்துள்ளார். இது சாதாரண விடயமல்ல-என்றார்.

(அ)

# சீனா செல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 06

பெல்ட் அண்ட் றோட் முயற்சியின் 10ஆவது ஆண்டு உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 16 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கு பயணிக்கவுள்ளார்.

குறித்த விஜயத்தின் போது சீன ஜனாதிபதி ஜின் பிங் உள்ளிட்ட பல்வேறு தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

சீனாவிடமிருந்து கடன் நிவாரணத்தைப் பெறுவதில் இலங்கை சவால்களை எதிர்கொண்டுள்ளதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றபோதிலும். இரு தரப்புக் கடனை மறுசீரமைக்கும் பொறிமுறை குறித்து சீன ஜனாதிபதி ஜின் பிங்குடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி அலுவலகத்தின் பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயத்தின் போது கடன் நிவாரணம் தொடர்பில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும் என எதிர்ப்பார்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் சீனாவுக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும். (அ)

# கோட்டாபய மீது வழக்கு; ஆட்சேபிக்க அவகாசம்!

கொழும்பு, ஒக். 06

போராட்டத்தின்போது நாடளாவிய ரீதியில் அவசர நிலைமையை அமுல்படுத்துவதற்கு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்க்ஷ மேற்கொண்ட தீர்மானத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் நேற்று கால அவகாசம் வழங்கியுள்ளது.

இதன்படி, நேற்றிலிருந்து கணக்கில் வரக்கூடியதாக எட்டு வாரங்களுக்குள் உரிய ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# கொழும்புக்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டலா?

## அறிக்கை கோருகிறது நீதிமன்றம்

கொழும்பு, ஒக். 06

கொழும்பு பிரதேசத்திலுள்ள சில இடங்களை இலக்கு வைத்து குண்டு தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ள தாக கூறப்படும் தகவல் தொடர்பில் முழுமையான அறிக் கையை உடனடியாக நீதிமன்றில் சமர்பிக்குமாறு பயங்க ரவாத விசாரணை பிரிவினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

நீதிமன்றத்தில் இருந்து சிறைச்சாலைக்கு பேருந்தில் அழைத்துச் செல்லப்பட்ட கைதி ஒருவரினால் எறியப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் இது தொடர்பான தகவல் குறிப்பிடப்பட்டிருந்ததாக பயங்கரவாத விசாரணை பிரிவினர் நீதிமன்றத்திடம் அறியப்படுத்தப்படுத்தியிருந்தனர்.

இதனை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (அ)

# முல்லைத்தீவு சட்டத்தரணிகளின் பணிப்புறக்கணிப்பு தொடர்கிறது

முல்லைத்தீவு, ஒக். 06

முல்லைத்தீவு நீதிபதி ரீ.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினரால் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட காலவரையறையற்ற தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் நான்காவது நாளாக தொடர்வதாக முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் த. பரஞ்சோதி தெரிவித்தார்.

# முல்லைத்தீவு பிக்குகளால் குறி வைக்கப்படுகின்றது!

## செல்வம் எம்.பி கவலை

மன்னார், ஒக். 06

தென்னிலங்கை இனவாதிகள் மற்றும் பௌத்த பிக்குகளால் முல்லைத்தீவு மாவட்டம் குறிவைக்கப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குருந்தூர் மலை தொடர்பான தீர்ப்பை மாற்ற வேண்டும் என அழுத்தங்கள், உயிர் அச்சுறுத்தல் பிரயோகிக்கப்பட்டுள்ளதால் நீதிபதி ரி.சரவணராஜா நாட்டைவிட்டு சென்றிருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளலாம். ஆனால், பதவிகளை இராஜினாமா செய்வதென்பது என்னைப் பொருத்தமட்டில் பொருத்தமானதாக இருக்காது.

அப்படியாயின் எம்.பிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக இராஜினாமா கடிதத்தை கொடுக்க வேண்டும். ஆனால், தற்போது இருக்கின்ற சூழலில் முல்லைத்தீவு மாவட்டம் தென்னிலங்கை இனவாதிகள் மற்றும் பௌத்த பிக்குகளால் குறி வைக்கப்படுகின்றது.

இவ்வாறு குறிவைக்கப்படுகின்ற சூழலில் நாங்களும் ஆவேசத்துடன் செயல்படுவோமாக இருந்தால் பாராளுமன்றத்துக்கு இந்த விடயங்களை கொண்டுசெல்வதற்கான வாய்ப்புகள் அற்றுபோகும்.

சர்வதேசத்திடம் உரிமையோடு கேட்கும் விடயங்களை கேட்க முடியாத சூழல் உருவாகும். பகிஷ்கரிக்கின்ற விடயத்தை மீள் பரிசீலனை செய்யலாம். ஆனால், நிலங்கள் பறிபோய் கொண்டிருக்கின்ற சூழலில் தட்டிக் கேட்கின்ற அதிகாரத்தை நாம் இழந்துவிடக் கூடாது.

தென்னிலங்கையில் இருக்கின்ற இனவாதிகள் மற்றும் பௌத்த பிக்குகள் எமது பூர்வீகத்தை ஒழிப்பதற்காகவும் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற வரலாற்றை சிதைப்பதற்காகவும் முழு மூச்சோடு செயற்பட்டு வருகின்றனர்-என்றார்.

(அ)

# மத்துும பண்டார என்னை அவமானப்படுத்திவிட்டார்

## டயனா கமகே குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 06

ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது, கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தன்னை “பெட்டை நாய்” என கூறி அவமனப்படுத்தியதாக இராஜாங்க அமைச்சர் டயனா கமகே நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்னை ஒன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருக்கும் சில பண்டாரக்களுக்கு பெண்களுடன் ஏதோ ஒரு பாக்கி உள்ளது.

இதனால், இந்த பண்டார குழுவினரை திருத்தி வைத்துக்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.

எனக்கு ஏற்பட்ட அவமதிப்பு சம்பந்தமாக பாராளுமன்றத்தில் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் டயனா கமகே கூறியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



## உலகக் கிண்ண அணியுடன் இணைகிறார் மஹஷ் தீக்ஷன




கொழும்பு, ஒக். 06

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளரான மஹீஷ் தீக்ஷன உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை கிரிக்கெட் குழாத்துடன் இணைந்து கொள்வதற்காக புதன் கிழமை இந்தியாவுக்கு பயணமானார்.

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரின்போது உபாதைக்குள்ளான மஹீஷ் தீக்ஷனவால், ஆசிய கிண்ண இறுதிப் போட்டியிலும் பங்கேற்க முடியவில்லை. மருத்துவ ஆலோசனைகளை பின்பற்றி வந்திருந்த நிலையில், கடந்த 26ஆம் திகதியன்று இந்தியாவுக்கு பயணமான இலங்கை குழாத்தினருடன் மஹீஷ் தீக்ஷனவால் பயணிக்க முடியவில்லை.

தற்போது உபாதையிலிருந்து மீண்டு வந்துள்ள இவர், எதிர்வரும் 7 ஆம் திகதியன்று டில்லியில் நடைபெறவுள்ள தென்னாபிரிக்க அணியுடனான முதலாவது போட்டியில் பங்கேற்பார் என குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, காயமடைந்த துஷ்மந்த சாமீர உலகக் கிண்ணத் தொடரின் நடுப்பகுதியில் இலங்கை குழாத்தினருடன் இணைந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

### ஆசிய விளையாட்டு:

## இலங்கைக்கு முதல் தங்கம் தருஷி கருணாரட்ன பெற்றார்

ஹாங்சே, ஒக். 06

ஆசிய விளையாட்டு போட்டியில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியை 2 நிமிடங்கள் 3.20 செக்கன்களில் நிறைவு செய்த இலங்கை வீராங்கனை தருஷி கருணாரட்ன முதலிடம் பிடித்தார். இதன் மூலம் இலங்கைக்கு முதலாவது தங்க பதக்கத்தை வென்று கொடுத்தார்.

சீனாவின் ஹாங்சேவில் நடைபெற்று வரும் 19ஆவது ஆசிய விளையாட்டு விழாவில் மெய்வல்லுநர் போட்டி நிகழ்வின் பெண்களுக்கான 800 மீற்றர் இறுதிப் போட்டி புதன்கிழமை நடந்தது.

இப்போட்டியில் பங்கேற்றிருந்த இலங்கை வீராங்கனையான தருஷி கருணாரட்ன 2 நிமிடங்கள் 3.20 செக்கன்களில் போட்டி தூரத்தை நிறைவு செய்து தங்கப் பதக்கம் கைப்பற்றி இலங்கைக்கு பெருமை சேர்த்தார்.

இப்போட்டியின் இரண்டாவது இடத்தை பிடித்த இந்தியாவின் ஹார்மில்ன் பெய்ன்ஸ் ( 2 நிமிடங்கள் 3.75 செக்கன்கள்) வெள்ளிப் பதக்கத்தையும், மூன்றாவது இடத்தை பிடித்த சீனாவின் வேங்க் சுன்யு (2 நிமிடங்கள் 3.90 செக்கன்கள்) வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினார்.

இந்தப் போட்டியில் பங்கேற்ற மற்றுமொரு இலங்கை வீராங்கனையான கயந்திகா அபேரட்ண 2 நிமிடங்கள் 5.87 செக்கன்களில் நிறைவு செய்து 8 ஆவது இடத்தை பிடித்தார்.

தருஷி கருணாரட்ன கைப்பற்றிய தங்கப் பதக்கமானது, ஆசிய விளையாட்டு விழா வரலாற்றில் இலங்கை கைப்பற்றிய 12ஆவது தங்கப் பதக்கமாகும்.






# ஆசிய விளையாட்டில் இலங்கைக்கு வெண்கலம்!

ஹாங்சே, ஒக். 0

ஆசிய விளையாட்டு போட்டியில் பெண்களுக்கான 4 X 400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியை 3 நிமிடங்கள் 30.88 செக்கன்களில் நிறைவு செய்த இலங்கை மூன்றாவது இடத்தை பிடித்து வெண்கல பதக்கத்தை கைப்பற்றியது.

புதன்கிழமை மாலை நடைபெற்ற இப்போட்டியில் முதலாவது இடத்தை பிடித்த இந்தியா 3 நிமிடங்கள் 27.65 செக்கன்களில் நிறைவு செய்து தங்கப்பதக்கத்தை கைப்பற்றியதுடன், வெள்ளிப் பதக்கத்தை பஹ்ரைன் 3 நிமிடங்கள் 27.85 செக்கன்களில் நிறைவு செய்திருந்தது.

இலங்கை அணியில் தருஷி கருணாரட்ண, நதீஷா ராமநாயக்க, சயூரி மெண்டிஸ், ஜயேஷி உத்தரா ஆகியோர் அங்கம் வகித்திருத்தனர்.

### ஆசிய விளையாட்டு:

## அஞ்சல் ஓட்டத்தில் இலங்கைக்கு வெண்கலம்!




ஹாங்சே, ஒக். 0

ஆசிய விளையாட்டு போட்டியில் ஆண்களுக்கான 4 X 400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியை 3 நிமிடங்கள் 02.55 செக்கன்களில் நிறைவு செய்த இலங்கை மூன்றாவது இடத்தை பிடித்து வெண்கல பதக்கத்தை கைப்பற்றியது.

நேற்று இலங்கை நேரப்படி மாலை 6.00 மணியளவில் நடைபெற்ற இப்போட்டியின் முதலாவது இடத்தை பிடித்த 3 நிமிடங்கள் 01.58 செக்கன்களில் நிறைவு செய்து தங்கப்பதக்கத்தை கைப்பற்றியதுடன், வெள்ளிப் பதக்கத்தை கட்டார் 3 நிமிடங்கள் 02.05 செக்கன்களில் நிறைவு செய்திருந்தது.

இலங்கை அணியில் அருண தர்ஷன, பபசர நிக்கு, ரஜித்த ராஜ கருணா, காலிங்க குமாரகே ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

## உலகக் கிண்ணம் ஆரம்பம் டெண்டுல்கருக்கு கௌரவம்!

அகமதாபாத், ஒக். 06

ஐ. சி. சி. 50 ஓவர் உலகக் கிணணக் கிரிக்கெட் போட்டி நேற்றுத் தொடங்கியது.

தொடக்க விழா நிகழ்வில் உலகக் கிண்ணக் கிரிக்கெட்டுக்கு சர்வதேச தூதராக நியமிக்கப் பட்ட இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் மைதானத்துக்கு அழைக்கப்பட்டார்.

சச்சினுடன், ஐவகல் சிறீநாத் போட்டி நடுவர் என்ற முறையில் கலந்துகொண்டார். சச்சின் பெயர் உச்சரிக்கப்பட்டதும் நரேந்திர மோடி மைதானத்தில் இருந்த ரசிகர்கள் ஆர்ப்பரித்தனர். பின்னர், தனது கைகளில் உலகக் கிண்ணத்தை சுமந்துவந்த சச்சின் அதை மைதானத்தில் காட்சிக்காக வைத்தார். இதன்பின் முறைப்படி அவரால் உலகக் கிண்ணப் போட்டிகள் தொடங்கி வைக்கப்பட்டன. (ஐ)



ஈழநாடு



# ராகுலின் பாதை காந்தியின் பாதையா, நேருவின் பாதையா?

ராஜன் குறை கிருஷ்ணன்



ராகுல் காந்தி இந்திய தேசிய காங்கிரஸின், இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர். இந்த உண்மையை யாரும் மறுக்க முடியாது.

பாரத் ஜாடோ யாத்திரை என்ற பெயரில் எழுச்சி மிக்க ஒரு நடைபயணத்தை கன்னியாகுமரி முதல், காஷ்மீர் வரை மக்களை ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் நடத்தினார். ஊடகங்கள் எவ்வளவு புறக்கணித்தாலும், இந்திய அரசியலைப் பொறுத்தவரை அது முக்கியமானதொரு நிகழ்வுதான். பல்வேறு அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், மக்கள் இயக்கங்களைச் சார்ந்தவர்கள் அந்த யாத்திரையில் பங்கெடுத்தார்கள். ராகுல் அனைவருடனும் இணைந்து நடந்தார். இளைப்பாறும் நேரங்களில் மக்களுடன், பல்வேறு தரப்பினருடன் உரையாடினார். அந்த பயணத்தைக் குறித்த தகவல்களை பின் தொடர்ந்தவர்கள் ஒன்றை புரிந்துகொண்டிருக்கலாம். ராகுல் காந்தி முழுமையாகத் தன்னை அரசியலுக்கு அர்ப்பணித்துக்கொண்டுள்ளார் என்பதுடன் அதற்கான ஆன்ம பலத்தையும், அறிவுத் தெளிவையும் பெற்றுள்ளார்.

அவர் வாரிசுத் தலைவர் என்று சில பொதுமன்ற சிந்தனையாளர்கள் முகம் சுளிக்கிறார்கள். பாரதிய ஜனதா கட்சி அதை பெரும் குற்றச்சாட்டாக முன்வைக்கிறது. பொதுவாகவே வாரிசுத்தலைமை என்பது இந்திய மக்களாட்சி அமைப்பில் பல்வேறு கட்சிகளில் உருவாவதை ஒரு அரசியல் யதார்த்தமாகத்தான் மானுடவியல் கோணத்தில் நான் புரிந்துகொள்கிறேன். மக்களாட்சியின் அடிப்படை முரண்களைக் கடந்து அதன் சாத்தியங்களை செயல்படுத்த ஒவ்வொரு சமூகமும் சில வழிவகைக்களைக் காணத்தான் வேண்டும். அதில் இது ஒன்று என்பதால் அதன் சாதக, பாதகங்களைக் குறித்து இந்த கட்டுரையில் பேச முடியாது. ராகுல் காந்தி வழமையான வாரிசுத் தலைவரும் அல்ல. தன் பதின்ம வயதில் பாட்டியும், பின்னர் இருபது வயதில் தந்தையும் அரசியல் காரணங்களுக்காக படுகொலை செய்யப்படுவதைப் பார்த்தவர். பெரும் அதிர்ச்சியளிக்கத்தக்க இந்த நிகழ்வுகள் அவரை அரசியலை வெறுக்கவும் செய்திருக்கலாம் அல்லது அரசியல்தான் வாழ்க்கை என்ற எண்ணத்தையும் விதைத்திருக்கலாம்.

கட்சியினரும் சரி, மக்களும் சரி அவரை தலைவராக ஏற்கிறார்கள். அவரால் தனித்துவமிக்க சில வெளிப்பாடுகளை செய்ய முடிகிறது. ஐம்பத்து மூன்று வயதான அவர் அடுத்த சில பத்தாண்டுகளின் இந்தியாவின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றுவார் என்பதில் பெரும்பாலோர்க்கு ஐயம் இருக்க முடியாது. ஆனால் எந்த வகையில் பங்காற்றுவார் என்பதை சிந்திக்கும்போதுதான் சில முக்கிய கேள்விகள் எழுகின்றன. குறிப்பாக இரண்டு சாத்தியங்கள் அல்லது பாதைகள் அவர் முன் இருக்கின்றன. ஒன்று காந்தியின் பாதை. மற்றொன்று நேருவின் பாதை. அந்த இரண்டில் அவர் எதைத் தேர்ந்தெடுப்பார், வரலாறு எந்த பாதையில் அவரை செலுத்தும் என்பதே கேள்வி அதைத்தான் இந்த சிறிய கட்டுரையில் விவாதிக்க விரும்புகிறேன்.

அவர் பெயரிலுள்ள காந்தி அவர் பாட்டனார் ஃபிரோஸ் காந்தியின் வம்சம் என்பதால் வருவது. அவர் உள்ளபடி ஜவஹர்லால் நேருவின் கொள்ளுப் பெயரன். ஆனால் ஜவஹர்லால் நேரு, மகாத்மா காந்தியால் தன் அரசியல் வாரிசாக அறிவிக்கப்பட்டவர். காங்கிரஸ் என்பதன் முக்கியமான வரலாற்றுப் பணி காந்தி, நேரு ஆகிய இருவரின் பங்களிப்பினால் உருவானது. காந்தியின் அரசியல் பாதை என்பது மக்களை சில இலட்சியங்களின் பால், விழுமியங்களின் பால் ஈர்க்கும் பாதை. மக்களை விழிப்புணர்வு கொள்ள வைக்கும் பாதை. நேருவின் பாதை ஆட்சியமைக்கும் பாதை. அரசதிகாரத்தினை பயன்படுத்தி மக்களின் வாழ்வை மேம்படுத்தும் பாதை. இந்த இரண்டுமே அரசியலுக்கு இன்றியமையாததுதான். முன்னது விதைப்பது என்றால், பின்னது அறுவடை செய்வது எனலாம்.

### காந்தியின் அன்றாடம்

காந்தி இந்திய அரசியலில் பங்கேற்பதற்கு முன்னால் முப்பதாண்டுகளாக இந்திய தேசிய காங்கிரஸ் இரு விதமான போக்குகளையே கொண்டிருந்தது. ஒன்று இந்தியர்களின் கோரிக்கைகளை பிரிட்டிஷ் அரசிற்கு எடுத்துரைக்கும், இந்தியர்களின் நன்மைக்காக வாதிடும், அரசதிகாரத்தில் பங்கேற்பினைக் மிதவாதப் போக்கு. மற்றொன்று பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து முற்றிலும் விடுபட்டு சுயராஜ்யம் அமைக்க வேண்டும் என்று கோரும் போக்கு. அது தீவிரவாதப் போக்கு. மிதவாதப் போக்கு கூட்டம் போட்டு பேசுவது, மனு கொடுப்பது என்பது போன்று இயங்கியதென்றால், தீவிரவாதப் போக்கு கிளர்ச்சிகளை ஆதரித்தது. இதில் வன்முறையை, தாக்குதல்களை, தனிநபர் கொலைகளை ஆதரிப்பவர்களும் இருந்தார்கள். இந்த இரண்டுமே அரசை நோக்கிய செயல்பாடுகளாக அமைந்தது.

காந்தி மக்களை நோக்கிய செயல்பாடுகளையே சிந்தித்தார். அவரது தென்னாப்பிரிக்க அனுபவங்களில் அவர் சகல விதமான மக்களும் ஒன்றிணைந்து அறவழியில் போராடுவதே சரியான வழி என்று கண்டார். மக்களின் ஆன்ம பலமே அவர்கள் 'மனத்தின் கண் மாசிலனாதலே' அரசியல் மறுமலர்ச்சிக்கு, விடுதலைக்கு வழி என்று நினைத்தார். தால்ஸ்தோய் எழுதிய 'கிங்டம் ஆஃப் காட் இஸ் வித்தின் யூ' (Kingdom of God is Within You - (1894) என்ற நூலே காந்தியின் மீது மிகுந்த தாக்கத்தைச் செலுத்தியது என்பதை அவரே குறிப்பிட்டுள்ளார். தென்னாப்பிரிக்காவில் அவர் உருவாக்கிய தால்ஸ்தோய் பண்ணையே அவரது இந்திய ஆசிரமங்களுக்கும் முன்மாதிரியாக அமைந்தது.

காந்தி 1909ஆம் ஆண்டு அக்டோபர் 24ஆம் தேதி லண்டனில் விஜயதசமியைக் கொண்டாடும் பொருட்டு கூடிய சிறிய கூட்டத்தில் சாவர்க்கரை முதலும் கடைசியுமாக நேரில் சந்தித்தார். காந்தி ராமாயணத்தில் பத்து தலை ராவணன் கொல்லப்படுவதும், கீதையில் போர் ஆதரிக்கப்படுவதும், நமது மனதின் மாசுகளைக் களையும் போர்களுக்கான உருவகங்களே என்றார். மனதிற்குள் நற்குணங்களுக்கும், தீய குணங்களுக்கும் நடக்கும் போரின் உருவகச் சித்திரங்கள் என்று இதிகாசங்களை வாசிக்க வேண்டுமென்றார். சாவர்க்கர் திட்டவட்டமாக இதிகாசப் போர்கள் அந்நியர்களுடன், எதிரிகளுடன் நட த்தும் போர் என்றார் வன்முறையை வீரம் என்று கொண்டாடி ஆதரித்தார்.

இந்த நிகழ்வின் தூண்டுதலால் கப்பலில் தென்னாப்பிரிக்காவிற்கு திரும்பும்போதுதான் காந்தி அவருடைய புகழ்பெற்ற 'இந்து சுயராஜ்யம்' நூலை எழுதினார். அதில் அவர் சுயராஜ்யம் என்றால் என்ன என்ற கேள்விக்கு விரிவானதொரு விளக்கத்தை எழுதினார். மக்கள் அவர்கள் பண்பாட்டின் அடிப்படையில் அவர்கள் விரும்பியபடி வாழ்வதே சுயராஜ்யம் என்றார். பிரிட்டஷ்காரர்களை எதிர்ப்பதோ, நாட்டை விட்டு விரட்டுவதோ, அவர்களிடமிருந்து அரசதிகாரத்தை பறிப்பதோ விடுதலை ஆகிவிடாது. நமது தேர்வின்படி வாழ முடிவதே சுயராஜ்யம் என்றார். வேறு வார்த்தைகளில் சொன்னால் அரசியலின் இறுதி இலக்கு மக்களின் அன்றாட வாழ்வில், அவர்கள் தேர்வுகளில், சுதந்திரத்தில்தான் அடங்கியுள்ளது என்பதே பொருளாகும். அதனால்தான் கதராடை என்ற அன்றாட வாழ்வியல் வடிவத்தை தன் அரசியலின் அடிப்படையாக நிறுவினார் காந்தி.

அரசியல் தத்துவம் என்று பார்த்தால் குடியரசு என்பது என்ன? மக்களின் ஒட்டுமொத்த எண்ணங்களுக்கு, அவர்களுடைய வாழ்வியல் தேர்வுகளுக்கு வடிவம் கொடுப்பதுதானே? மக்களுக்காகத்தான் அரசே தவிர, அரசிற்காக மக்களில்லையே? எனவே உண்மையான அரசியலின் களம் என்பது மக்களின் மனங்களே. அந்த மனங்களை வெல்பவர், அவற்றின் சிந்தனைகளை வடிவமைப்பவரே தலைமையின் உண்மை வடிவமாகிறார். அதனால்தான் காந்தி தொடர்ந்து மக்களுடன் உரையாடினார். அவர்களுடன் இணைந்து வாழ்ந்தார். அவருக்கு அரசாட்சியில் பங்கேற்பதில் ஆர்வமிருக்கவில்லை. காந்தி தேர்தலில் போட்டியிடுவதை நினைத்துக்கூட பார்க்க முடியாது. அவரது பிரதிநிதித்துவம் தேர்தல்களுக்கு அப்பாற்பட்டது. அது மக்களின் விழைவுகளுடன் ஒருங்கிணைத்துக் கொள்வதால் தானாக உருவாவது. இத்தகைய மக்கள் பாதையே காந்தியின் பாதை.

### நேருவின் வரலாறு

நேருவின் புகழ்பெற்ற நூல், அவர் 1942-45ஆம் ஆண்டுகளில் சிறையிலிருக்கும்போது எழுதிய 'இந்தியாவை கண்டறிதல்' (Discovery of India) என்ற நூலாகும். இதுவும் சரி, அவர் 1929ஆம் ஆண்டு சிறையில் இருக்கும்போது மகளுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பானாலும் சரி, 'கிலிம்ப்சஸ் ஆஃப் வேல்டு ஹிஸ்டரி' (Glimpses of World History) என்ற நூலானாலும் சரி, எல்லாமே வரலாற்றைக் குறித்த ஆழ்ந்த அக்கறையை வெளிப்படுத்துபவை, சிந்திப்பவை. வரலாற்றெழுதியல் என்பது அரசுருவாக்கத்தினையே மையமாகக் கொண்டது. நேருவும் பண்டைய அரசுகள், பேரரசுகள், அரசர்கள் ஆகியவர்களைப் பற்றிய ஆய்வுகளில், சிந்தனைகளில் ஆர்வம் கொண்டிருந்தார். அந்த வரலாறுகளின் தொடர்ச்சிதான் நாம் என்று நினைத்தார். இது அவரை அடிப்படையில் ஆட்சியின் பால் அக்கறை கொள்ளச் செய்தது.

காந்தி கட்சியமைப்புடனேயே தன் உறவை அதிகாரபூர்வமானதாக வைத்துக் கொள்ளவில்லை என்றாலும், நேருவை கட்சித் தலைவராக்குவதில் முன் நின்றார். தான் மக்களை நோக்கி அரசியல் செய்தாலும், கட்சியை தலைமையேற்று வழிநடத்த, ஆட்சியமைக்க ஒரு சரியான தலைவர் தேவை என்பதை உணர்ந்ததால் காந்தி, ஜவஹர்லால் நேருவைத் தேர்ந்தெடுத்தார். அதனாலேயே நேருவை தன் அரசியல் வாரிசு என்று கூறினார். அது மிகச் சரியான தேர்வாகவே அமைந்ததை வரலாறு காட்டியது.

நேரு இந்தியாவின் முதல் பிரதமராக பதவியேற்ற நிலை என்பதற்கு ஒப்பானதான நிலை உலக வரலாற்றில் வேறு இருந்திருக்குமா என்று கூற முடியாது. ஏனெனில் தங்களை ஒரே நாடாக எந்த காலத்திலும் பார்த்திராத பல்வேறு மக்கள் தொகுதிகளின் பிரம்மாண்டமான கூட்டமைப்பை ஒரே நாடு, ஒரே தேசம் என்று நிறுவி அனைவர் ஒத்துழைப்பையும் பெறுவதும், அதையும் ஒரு மக்களாட்சி, கூட்டாட்சிக் குடியரசாக நிலைபெறச் செய்வதும் எளிதான விஷயமல்ல. அவர் கட்சியே பல்வேறுபட்ட கொள்கைப் புலங்களை, கருத்தியல் தேட்டங்களை உடைய தலைவர்களைக் கொண்டிருந்தது. அனைவரையும் ஒருங்கிணைத்து கட்சியையும், ஆட்சியையும் வழி நடத்தி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், கட்டுமான வளர்ச்சியையும் உறுதி செய்து இந்திய சுதந்திரத்தைக் காத்து நிற்பது என்பது மாபெரும் வரலாற்றுச் சவால் என்றால் மிகையாகாது.

என்னதான் காந்தி ஈட்டிக்கொடுத்த வெகுமக்கள் ஆதரவை, தன் சொந்த ஈர்ப்பு சக்தியினுடன் இணைத்து வளர்த்தெடுத்துக்கொண்டாலும், கட்சியையும், ஆட்சியையும் நிர்வகிப்பது எளிதானதல்ல. அந்த அரசியலாற்றல் நேருவுக்கு இருந்தது ஒரு நல்வாய்ப்பு. ஆனால், அவர் ஒரு அரசியலராகவே செயல்பட வேண்டி இருந்தது. காந்தியைப் போல அதிகாரத்தை துறந்த இலட்சியவாதியாகவெல்லாம் அவரால் தோற்றமளிக்க முடியவில்லை. தேர்தல் பிரசாரங்களில் காங்கிரஸிற்கு ஆதரவு தேட வேண்டி இருந்தது. பிரதிநிதித்துவ அரசியல் சமரசங்களையும், சமன்பாடுகளையும் ஏற்க வேண்டி இருந்தது. அதையெல்லாம் திறம்படச் செய்து 1947 முதல், 1965 வரையிலான பதினெட்டு ஆண்டுகளில் இந்தியாவை உலகின் மிகப் பெரிய மக்களாட்சிக் குடியரசாக நிலைபெறச் செய்தார் நேரு. அவரது பாதை மக்களாட்சிப் பாதை. அரசாட்சிப் பாதை.

### ராகுலின் பாதை எது?

மக்களின் அன்றாட வாழ்வையும், வரலாற்றையும் பிணைப்பது மொழிதான். எனவேதான் இந்தியா பல்வேறு மொழிபேசும் மக்கள் தொகுதிகளின் கூட்டமைப்பாக உள்ளது. இந்திய அரசமைப்பின் அழிக்க முடியாத பன்மை இது. இந்த உண்மையே வெகுமக்கள் அரசியலை மொழிவாரி மாநிலம் சார்ந்ததாக வைத்துள்ளது. எழுபதாண்டுகால தேர்தல்கள் சார்ந்த வெகுமக்கள் அரசியலில் மாநிலங்களே முக்கிய களங்களாக உருவெடுத்துவிட்டன.

காங்கிரஸ் கட்சியால் தன்னுடைய அரசியல் வலிமை மாநில அரசியல் கட்சிகளாக உருமாறுவதைத் தடுக்க முடியவில்லை. அதுதான் நேற்மறையான வரலாற்றுப் போக்காகவும் இருக்க முடியும் என்பதால் அதனை அங்கீகரித்துதான் ஆக வேண்டும். எனவே, காங்கிரஸ் மாநிலங்களில் வெற்றிபெற வலுவான மாநில தலைவர்களை உருவாக்க வேண்டும், முன்நிறுத்த வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது. சீதாராமையா-டி.கே.சிவகுமாரும், அசோக் கெலாட்-சச்சின் பைலட்டும்தான் வெற்றிகளை ஈட்ட முடியும். ராகுல் காந்தி அவர்களுக்கு தார்மீக ஆதரவாக இருக்கலாம். பல்வேறு முக்கிய மாநிலங்கள் இன்று திட்டவட்டமாக மாநில அரசியல் கட்சிகளின் பிடியில் சென்றுவிட்டன. தேசியக் கட்சி என்று சொல்லிக்கொண்டாலும் அவை முழுக்கவும் மாநிலத்தன்மை கொண்டவைதான். உதாரணமாக பினரயி விஜயன் சி.பி.ஐ.(எம்) என்ற தேசிய கட்சி என்று சொன்னாலும், அவரும் அவர் தலைமையிலுள்ள கேரள சி.பி.ஐ (எம்) கட்சியும் மாநிலத்தன்மை கொண்டவைதான்.

துவக்கம் முதலே இந்தியாவின் கூட்டாட்சித்தன்மையை மறுத்து, ஒற்றை அரசாக ஒற்றை மத அடையாளத்தின் அடிப்படையில் இந்தியாவை வடிவமைக்க

(16ம் பக்கம் பார்க்க)

# ஒன்லைன் பாதுகாப்புச் சட்டம்: எதேச்சாதிகாரத்துக்கான ஒரு ட்ரோஜன் குதிரை



சஞ்சன ஹத்தொட்டுவ

இலங்கையின் ஒன்லைன் பாதுகாப்புச் சட்டத்தின் (**Online Safety Act**) வரைவு கடந்த வாரம் பிரசுரிக்கப்பட்டது. அது மிகக் கடுமையான, ஆபத்தான ஒரு வரைவாக இருந்து வருகிறது. அது குறித்து ஆச்சரியப்படுவதற்கோ, திடுக்கிடுவதற்கோ எதுவுமில்லை. இந்த வரைவுக்கான ஆதரவு குறித்து நான் அறிந்திருக்கவில்லை. ஆனால், இலங்கையில் இருந்த பொழுது சிங்கள மொழி ஊடகங்களை நான் கவனித்த அளவுக்கு இப்பொழுது பார்க்காமல் இருப்பதும் இதற்கான ஒரு காரணமாக இருக்கலாம். இந்த வரைவுச் சட்டத்தின் ஏற்பாடுகள் வேண்டுமென்றே மிகவும் பரவலான விதத்திலான ஏற்பாடுகளாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சில பாகங்களை புரிந்து கொள்வதும் மிகக் கடினமானதாக உள்ளது. திட்டமிட்ட விதத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் மிகக் கொடிய சட்டப் பிரிவுகளிலும் பார்க்க, இவ்விதம் தெளிவற்றவையாக இருக்கும் பிரிவுகள் ஆபத்தானவையாகும். இந்த வரைவுச் சட்டத்தில் எமக்கு சுத்த அபத்தமானவையாகத் தெரியும் விடயங்கள் விமர்சன ரீதியான எதிர்க் கருத்துக்களின் குரல்வளையை நசுக்குவதற்கு அதனைப் பயன்படுத்த விரும்புபவர்களுக்கு முழுமையான விதத்தில் பொருள் பதிந்ததாக இருந்து வர முடியும். தளர்ச்சியான விதத்தில் வரையப்படும் சட்டங்கள் சிறப்பான சந்தர்ப்பவாதத்துக்கும், விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ற விதத்தில் அவற்றுக்கு பொருள்கோடலை வழங்குவதற்கும் தாராளமாக இடமளித்து வரும் பின்னணியிலேயே இதனை நோக்க வேண்டும். இறுதியாக, சமூக ஊடகங்களையும் உள்ளடக்கிய விதத்தில் இலங்கையில் ஒன்லைன் தொடர்பாடல்களை நிர்வகிப்பதற்கான எந்தவொரு உத்தேச சட்டவாக்கத்தையும் அவ்வளவு சீக்கிரமாக நாங்கள் மதிப்பீடு செய்ய முடியாது. இலங்கை அரசு தொடர் கண்காணிப்பை மேற்கொண்டு வரும் ஓர் அரசாக இருந்து வருவதுடன், 2022 இல் நாட்டில் இடம்பெற்ற அறகலய மக்கள் எழுச்சிக்கு மத்தியிலும், முக்கியமாக நாடு தொடர்ந்தும் வளர்ந்து வரும் ஜனநாயகக் குறைபாடுகளின் சுமைகளைக் கொண்டிருக்கிறது. இந்த சிறைப்படுத்தும் அரசொன்றுடன் சம்பந்தப்பட்ட இந்த துர்நாற்றம் வீசும் உடல் கடந்த பல தசாப்தங்களாக நீதித் துறை பொறிமுறைகளுக்கு வெளியிலான கொலைகள், ஆட்கடத்தல்கள் மற்றும் சித்திரவதை என்பவற்றுக்கு நன்கு பிரசித்தம் பெற்றதாக இருந்து வந்துள்ளது. எனவே, இந்த வரைவுச் சட்டத்தின் பிரயோகத்தையும், அதன் உண்மையான நோக்கத்தையும் புரிந்து கொள்வதற்கு இந்தப் பின்புலம் குறித்த தெளிவு அவசியமாகும்.

ஒரு பரவலான வாசிப்பில் இலங்கையில், குறிப்பாக அறகலயவுக்குப் பிற்பட்ட கால கட்டத்தை நோக்கும் பொழுது, வன்முறையுடன் கூடிய தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் என்பவற்றை எதிர்கொள்வதற்கான ஒழுங்குவிதிகளையும் உள்ளடக்கிய விதத்தில், பல்வேறு பிரச்சினைகளையும் இலக்காகக் கொண்ட ஒழுங்குவிதிகள் மற்றும் முன்மொழிவுகள் என்பன தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருவதனை பார்க்க முடிகின்றது. இது உபாய ரீதியான ஒரு விடயமாக இருந்து வருகின்றது என நான் நம்புகிறேன். இந்தச் சட்ட வரைவுகள் முன்வைக்கப்படுவதனை உடனடுத்து எதிர்ப்புக் குரல்கள் எழுப்புபவர்களில் யார் தொடர்ந்து அவற்றுடன் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில், அவற்றிலிருந்து விலகிக்கொள்ள முடியும் என்பதனை அந்த வரைவுகளைத் தயாரிப்பவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். இவ்விதம் ஒதுங்கிக் கொள்ளும் நிலை, இன்றைய இலங்கையில் பலர் சந்தித்து வரும் யதார்த்த நிலையைப் பொறுத்தவரையில் மக்களின் இருப்புடனும் சம்பந்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியுடன் ஏற்பட்ட அந்தத் திடீர் எதிர்ப்புகளை இவை ஒத்தவையாகும் என்பதனை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். கால இடைவெளியின்றி தொடர்ச்சியாக ஒன்றன் பின் ஒன்றாக மோசமான சட்டங்களை முன்மொழியும் செயல்பாடு, மக்கள் மத்தியில் மனச் சோர்வை போசித்து வளர்க்கும் நோக்குடன் உபாய ரீதியில் உருவாக்கப்பட்டு வரும் ஒரு செயன்முறை என நோக்க முடியும். அந்த நிலையில் ஒரு சிலரைத் தவிர, ஏனையவர்கள் இந்த எதிர்ப்புச் செயற்பாடுகளிலிருந்து விலகிக் கொள்வார்கள். ஆகவே, இத்தகைய சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கென தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் ஒரு சிலர் வன்முறையுடன் கூடிய பழிவாங்கல்களை எதிர்கொள்ளக் கூடிய நிலையில் இருந்து வருகிறார்கள். இதனுடன் அநேகமாக மற்றொரு உத்தியும் இணைந்திருக்க முடியும். அதன் பிரகாரம், அடிப்படை உரிமைகளை வெளிப்படையாகவே அவமதிக்கும் அருவருப்பான ஒரு வரைவுச் சட்டம் அல்லது சட்டம் நிராகரிக்கப்பட வேண்டும் என்பதே அதை முன் வைப்பவர்களின் இரகசிய விருப்பமாகும். அதாவது, எதிர்காலத்தில் இடம்பெறக் கூடிய ஒரு பேரனர்த்தத்துக்கு அல்லது அழிவுக்கு இத்தகைய சட்டங்களுக்கு எதிர்ப்புக் குரல்கள் எழுப்புபவர்கள் மட்டுமே காரணமாக இருந்து வருகின்றார்கள் என்பதனை எடுத்துக் காட்டுவதற்கான ஒரு முயற்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. தீவிர எதிர்ப்பு நிலையுடன் செயற்படும் ஆத்திரமடைந்த, கோபமான, பதற்றமான ஒரு சமூகப் பிரிவினரின் தாக்குதல்களின் கீழ் சிவில் சமூகத்தின் எதிர்ப்பு கணிசமான அளவில் பலவீனமடையும். அந்தப் பின்னணியில், அது தொடர்பான கடுமையான விமர்சனத்தை மிகவும் எளிதில் நிராகரித்து விட முடியும். அதே வேளையில், தேசிய பாதுகாப்பு நிர்ப்பந்தங்களின் போர்வையில் அவற்றிலும் பார்க்க கடுமையான சட்டதிட்டங்களை நாடாளுமன்றத்துக்கூடாக அவசர அவசரமாக நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

இத்தகைய கரிசனைகள் ஒரு புறமிருக்க, ஒன்லைன் பாதுகாப்புச் சட்ட வரைவு, இலங்கையில் இடம்பெறும் ஒன்லைன் ஊடான தீங்குகள் தொடர்பாக இடம்பெற்று வரும் மிக முக்கியமான மற்றும் தொடர்ச்சியான உரையாடலை கவலையளிக்கத்தக்க விதத்தில் நிலைமாற்றம் செய்கிறது - இந்த உரையாடல் தொடர்பாக ஏற்கனவே கணிசமான அளவிலான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது இதனை பக்கச்சார்பான, குறைபாடுகளுடன் கூடிய, சாரத்திலும் பார்க்க வெறும் சத்தத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஓர் உரையாடலாக மாற்றியமைத்திருக்கிறது. கோட்பாட்டிலும் வெறும் தோரணைகள் அதிகமாக உள்ளன. எத்தகைய தர்க்கபூர்வமான கலந்தாலோசனைகளும் இல்லாமல் அல்லது முழுமையாகவே தண்டனை விலக்குரிமை, வன்முறை மற்றும் கண்காணிப்பு என்பன நிலவி வரும் ஒரு பின்புலத்தை கவனத்தில் எடுப்பதற்கான எத்தகைய வேறு வழிமுறைகளையும் மேற்கொள்ளாமல் இந்த வரைவுச் சட்டம் சாதித்துக் கொள்ள முடியாத, சாதித்துக் கொள்வதற்குச் சாத்தியமற்ற குறிக்கோள்களை முன்வைக்கின்றது. ஒன்லைன் பாதுகாப்பு என்பது ஒருபோதும் ஒரு தனித்த ஒரு நோக்கத்தைக் இலக்காகக் கொண்டு எடுத்துவரப்படவில்லை. எவ்வாறிருப்பினும், இலங்கை அரசாங்கம் எம்மை அது 'இந்த' நோக்கத்திற்காக மட்டும்தான் கொண்டுவரப்படுகிறது என்று என்பதனை நம்பச் செய்வதற்கே முயற்சித்து வருகின்றது. அதன் காரணமாக, இச்சட்டம் இணையத்துக்கூடாக தீங்குகளை எதிர்கொண்டு வரும் சிறுவர்களையும், பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாப்பதற்கான ஒரு சட்டம் என்ற போர்வையில் வஞ்சகமான விதத்தில் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இவை பெருமளவுக்கு விரும்பத்தக்க குறிக்கோள்களாக இருந்து வரும் அதே வேளையில், இவ்வரைவுச் சட்டம் தெளிவாகவே சந்தர்ப்பவாத, விருப்பு வெறுப்புக்களுடன் கூடிய மற்றும் குறிப்பாக தேர்தல்கள் நிகழப்போகும் கால கட்டங்களில் அடக்குமுறை வழிமுறைகளைக் கொண்ட ஒரு டிரோஜன் குதிரையாகவே (வுசழதயெ ஊழசளந) இருந்து வருகின்றது.

இந்த உத்தேச சட்டவாக்கம் தொடர்பாக பல அடிப்படை பிரச்சினைகள் காணப்படுகின்றன. இலங்கையில் மித மிஞ்சிய அளவிலான குற்றச் செயல்கள் ஒரு அனுமானம் சார்ந்த அபாயமாக இருந்து வரவில்லை. அறகலயவின் போதும், அதன் பின்னரும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் (**ICCPR**) ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலில், இலங்கையில் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்டு, வடிவமைக்கப்பட்ட சட்டங்கள் அந்த உரிமைகளை உதாசீனம் செய்வதற்கும், செயற்பாட்டாளர்களை சிறையிலடைப்பதற்கும், அதே விதத்திலான அல்லது அதிலும் பார்க்க மோசமான ஒரு தலைவிதி ஏற்பட முடி யும் என மேலும் பலரை அச்சுறுத்துவதற்கும் பயன்படுத் தப்பட்டு வருகின்றது என்ற கசப்பான யதார்த்தத்தை இங்கு நினைவூட்ட வேண்டும். எதிர்ப்புத் தெரிவிப்பவர் களை மட்டுமன்றி கார்ட்டூன் சித்திரக் கலைஞர்கள், எழுத் தாளர்கள், டிஜிட்டல் கலைஞர்கள், அங்கத (நையாண்டி) எழுத்தாளர்கள் மற்றும் சமூக ஊடகங்களில் கருத்துத் தெரிவிக்கும் எந்த ஒரு நபரையும் வேட்டையாடுவதற் கான முன்னெப்பொழுதும் இருந்திராத விதத்திலான ஓர் அடித்தளத்தை இச்சட்டம் அரசுக்கு வழங்கும். உண்மையிலேயே மாணவர்கள், ஓய்வூதியதாரர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் மற்று அரச சார்பற்ற வலையமைப்புக்களுடன் சம்பந்தப்பட்டிராதவர்கள் ஆகியோரை பின்தொடர்வதற்கு இந்த வரைவுச் சட்டம் இடமளிக்கின்றது.

நன்கு அறியப்பட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களை இலக்கு வைத்து நிகழ்த்தப்படும் தாக்குதல்களிலும் பார்க்க மோசமான தாக்குதல்களை அவர்கள் மீது நிகழ்த்துவதற்கு இது இடமளிக்கின்றது. இச்சட்டம் தன்னிச்சையான விதத்தில் பிரயோகிக்கப்பட முடியும் என்பதும், அது மிகவும் கொடூரமானது என்பதும் இங்குள்ள விடயமாகும். வரைவுச் சட்டத்தின் தெளிவற்ற தன்மை அறியாமை காரணமாக இடம்பெற்றிருக்கின்றது எனக் கருத முடியும். இந்த வரைவு அதன் தற்போதைய வடிவத்தில் நிறைவேற்றப்பட்டால், பழிவாங்கக் கூடிய விதத்தில் அதன் பிரயோகம் இடம்பெறுவதற்கும், தத்தமது நலன்களுக்கு ஏற்ற விதத்தில் அதற்கு பொருள்கோடல் வழங்குவதற்கும் அது வாய்ப்பளிக்கும். மேலும், எதிர்ப்புக் குரல்களை மௌனிக்கச் செய்வதற்கான ஒரு உரிமத்தையும் அது வழங்கும். மேலும், இந்த வரைவுச் சட்டம், சட்டத்தை பலப்படுத்துவதற்குப் பதிலாக, பெருமளவுக்கு பிழையாக வழிநடத்தப்பட்ட, தூரநோக்கற்ற பார்வையுடன் கூடிய ஒரு புரிதலையே கொண்டுள்ளது. தனது பாவனையாளர்களுக்கு எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்து விடுபவர்களுக்கு உதவியோ அல்லது ஒத்தாசையோ புரியும் விடயம் தொடர்பாக தமது சொந்த நாடுகளின் நியாயாதிக்கங்களில் கம்பனிகள் பதிலளிக்க வேண்டியவையாக இருந்து வருகின்றன. இந்த நிலையில், அத்தகைய கம்பனிகள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பிரசித்தி பெற்றிருக்கும் (இலங்கையைப் போன்ற) ஒரு நாட்டை பொருட்படுத்தும் என்ற நம்பிக்கையில் இச்சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. **Silicon Valley** கம்பனிகள் மனித உரிமைகளை மேம்படுத்தும் விடயத்தில் அர்த்தபூர்வமான விதத்தில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளனவா என்பது குறித்து ஒரு அவநம்பிக்கை நிலவிவரும் அதே வேளையில், 2018 இன் தொடக்கத்தில் இலங்கையில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையின் பின்னர், பேஸ்புக் சுயாதீனமான ஒரு மனித உரிமை மதிப்பீட்டை மேற்கொண்ட உலகின் முதலாவது நாடு இலங்கையாக இருந்து வந்தது என்ற விடயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். இந்தக் கம்பனி வெறுமனே மற்றவர்களின் கட்டளைகளைப் பின்பற்றப் போவதில்லை. அத்தகைய கட்டளைகள் கம்பனித் துறையின் பொறுப்புக்களுடன் பொருந்திச் செல்லாதவையாக இருந்து வரும் அதே வேளையில், உரிய ஜாக்கிரதை வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையுடனும் பொருந்திச் செல்லாதவையாக இருந்து வருகின்றன. 'நியுயோர்க் டைம்ஸ்' பத்திரிகையில் 2018 ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டதைப் போன்ற மற்றொரு முதல் பக்கச் செய்திக் கட்டுரை இதற்கூடாக தோன்றக் கூடிய ஆபத்தும் இருந்து வருகின்றது. அதாவது, சமூக ஊடகக் கம்பனிகளின் உற்பத்திகளின் பாவனையாளர்களை மௌனிக்கச் செய்வதற்கு, சிறையிலடைப்பதற்கு, கொலை செய்வதற்கு, சித்திரவதை செய்வதற்கு அல்லது கடத்திச் செல்வதற்கு இடமளிக்கும் செயல்பாடுகளை தணிப்பதில் அக்கம்பனிகளின் வகிபாகத்தையும் இது எடுத்துக் காட்டுகின்றது. இந்த வரைவுச் சட்டத்தில் உத்தேசிக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்கு எந்தவொரு இடைநடுவர் நிறுவனமும் அங்கீகாரத்தை வழங்க மாட்டாது.

இந்த வரைவுச் சட்டம் ஒன்றன் பின் ஒன்றாக வந்த ராஜபக்ஷ அரசாங்கங்கள் அறிமுகம் செய்து வைத்த அடக்குமுறை இயல்பிலான வழிமுறைகளை புரிந்து கொள்ளத் தவறியுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சரத் பொன்சேகாவுக்கு என்ன செய்தது என்ற விடயத்தை 2009 ஆண்டளவிலேயே ஊடக அறிக்கைகள் எடுத்துக் காட்டியிருந்தன. மேலும், "பொன்சேகாவுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்கள் என அறியப்பட்டிருந்த அமைச்சர்கள், பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர்கள் போன்றவர்களும் கூட" குறிவைக்கப்பட்டிருந்தார்கள். இது தொடர்பாக 2010ஆம் ஆண்டில் குறுஞ் செய்திகளுக்கூடாகவும், பேஸ்புக்கிலும் "பொய்யான வதந்திகளைப் பரப்புவதாகக் கூறி" முதல் கைதுகள் மேற்கொள்ளப்பட்டன. அதே ஆண்டு ஜனவரி மாதம் "தேசிய பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய விதத்தில் நடந்து கொள்ளும் எந்தவொரு நபரையும் கைது செய்வதற்கு அரசாங்கம் தயங்க மாட்டாது" என பாதுகாப்புத் துறை பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல கூறியிருந்தார். மேலும், "கையடக்கத் தொலைபேசிகளுக்கூடாக பொய்யான செய்திகளை அனுப்பி வைப்பதன் மூலம் தேசிய பாதுகாப்பு மற்றும் இலங்கையின் இறைமை என்பவற்றுக்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபட்டு வரும் எந்தவொரு நபரும் கைது செய்யப்படுவார் என்றும், அத்தகைய நபர்களுக்கு எதிராக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அவர் கூறினார். ஆபாச படங்கள், குற்றச் செயல்கள், வெறுப்பு மற்றும் தீங்கு என்பவற்றை தூண்டுதல் போன்ற பிரச்சினைகளைக் கையாள்வதற்கென 2005ஆம் ஆண்டு தொடக்கம் ஒன்லைன் ஒழுங்குவிதிகளை அல்லது சட்டங்களை அறிமுகம் செய்து வைப்பதற்கென மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கும் ஒவ்வொரு முயற்சியையும் நான் கவனமாக ஆய்வு செய்திருக்கிறேன். இவற்றில் எவையும் நல்லெண்ணத்தில், லிபரல் ஜனநாயக அடிப்படைகள் அல்லது மிகவும் வலுவான காரணங்கள் என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(நாளை தொடரும்)

# சிபெட்கோவுக்கு புதிய தலைவர்!

கொழும்பு, ஒக். 06

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் புதிய தலைவராக சாலிய விக்ரமசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக கடமையாற்றும் தர்ஷன ரத்நாயக்க பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இருவரின் நியமனங்களும் நேற்று முதல் நடைமுறைக்கு வந்தன. இருவருக்கான கடிதங்களை மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர வழங்கியுள்ளார். (ஐ)

# பெண்களை கேவலப்படுத்தினால் அவர்களை கன்னத்தில் அறைவேன்!

## டயானா கமகே எம். பி.



கொழும்பு, ஒக். 06

பெண்களை கேவலப்படுத்தினால் கன்னத்தில் அறைவேன் என எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இராஜாங்க அமைச்சர் டயனா கமகே எச்சரிக்கை விடுத்தார்.

தன்னை பெட்டை நாயென ஐக்கிய மக்கள் சக்தி செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்ததாக குறிப்பிட்டு சபையில் நேற்று வியாழக்கிழமை சிறப்புரிமை பிரச்னையை எழுப்பி உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது இராஜாங்க அமைச்சர் தொடர்ந்து கூறுகையில்,

பாராளுமன்றத்தில் மட்டுமல்ல நாட்டில் எங்கேயும் பெண்களை அவமதிக்கும் வகையில் செயல்படுவதற்கு இடமளிக்கப் போவதில்லை. பெண்களை யார் என்று நினைத்தீர்கள். பெண்களை பெட்டை நாய் என்று இந்த சபைக்குள் கூற முடியாது. பெண்களிடம் கன்னத்தில் அறைவாங்கும் நாளில் புரியும்.

அதனால் பெண்களை அவதித்து பேசுவது இது முதல் தடவையல்ல. இதற்கு முன்னர் பல தடவைகள் இவ்வாறான மோசமான வார்த்தை பிரயோகங்கள் இந்த சபையில் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அதனால் தொடர்ந்தும் இதற்கு இடமளிக்க முடியாது. அதனால் பெண்களை மோசமாக பேசுபவர்களுக்கு என்னிடம் தான் கன்னத்தில் அறைவாங்க நேரிடும் - என்றார்.

இதன்போது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலருக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. (ஐ)

# ராகுலின் பாதை...

நினைத்த சக்திகளின், சாவர்க்கர்-கோல்வால்கரின், வழிவந்த பாரதிய ஜனதா கட்சி, எப்படியாவது அடக்குமுறைகளின் மூலமாவது தன் பிற்போக்கு இலட்சியத்தை நிறைவேற்றத் துடிக்கிறது. அதன் வன்முறைப் போக்கிலிருந்து நாட்டை மீட்டு மீண்டும் காந்தியின் அன்பும் நல்லிணக்கமும் நிறைந்த வழியில் நாட்டை கொண்டு செல்ல விரும்பும் ராகுல் காந்தி, இயல்பாகவே தேசத்தின் பன்மையையும், கூட்டாட்சியையும் அங்கீகரிக்கிறார். இந்தியா கூட்டணி என்ற இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்க கூட்டணியில் இருபத்தெட்டு கட்சிகளை ஒருங்கிணைத்து செல்லும் முயற்சியின் முக்கிய அச்சாணியாக இருக்கிறார்.

இங்கேதான் முக்கிய கேள்வி எழுகிறது. ராகுல் காந்தி கூட்டணியின் பிரதமர் வேட்பாளரா என்பதுதான் அது. பாஜக கட்சியைப் பொறுத்தவரை அப்படி நடந்தால் இந்தியா கூட்டணி பலவீனமடையும், வாரிசு அரசியல் என்ற குற்றச்சாட்டை பெரிதுபடுத்தலாம் என்று நம்புகிறது. காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை மல்லிகார்ஜூன கார்கேயிடம் ஒப்படைத்ததில், தான் பொறுப்புகளிலிருந்து விலகி நின்று மக்களை நோக்கி அரசியல் செய்ய நினைப்பதை உணர்த்தியுள்ளார் ராகுல் காந்தி. இந்த நிலையில் யார் பிரதமர் என்ற கேள்வியை தேர்தலுக்கு பிறகு ஆட்சியமைக்கும்போது தீர்க்கப்பட வேண்டிய கேள்வியாக இந்தியா கூட்டணி ஒத்திப்போடவே வாய்ப்பு அதிகம்.

தேர்தலுக்கு பிறகு கூட்டணி அரசிற்கு ஒருவர் பிரதமர் பொறுப்பேற்றால் நிச்சயம் அவர் ஜவஹர்லால் நேரு சந்தித்ததுபோல ஒரு சவாலான சூழலை மீண்டும் சந்திப்பார். ஒன்றிய-மாநில அதிகாரப் பகிர்வில் ஒரு புதிய சமன்பாட்டை உருவாக்காமல், ஒன்றிய பிரதமர் பதவியின், அமைச்சரவையின் முக்கியத்துவத்தைக் குறைக்க முடியாது. அவ்விதமான மாற்றங்களை அனைவர் ஒப்புதலுடனும் நிறைவேற்ற திறமை மிகுந்த தலைவர் வேண்டும். அதேசமயம், அவர் முன்னெப்போதையும்விட சமரச மனோபாவம் கொண்டவராக இருக்க வேண்டும்.

ஆனால் அது மட்டுமே சவால் அல்ல. பாஜக நாட்டின் பல பகுதிகளிலும் மத அடையாளவாத அரசியலை பதியன் போட்டுள்ளது. மக்களைப் பிரித்து அரசியல் செய்யும் அதன் பண்பாட்டு வெறுப்பரசியலை தொடர்ந்த பிரசாரத்தின் மூலம் முறியடிக்க வேண்டும். அதற்கு காந்தியைப் போல அரசை, கட்சிகளைக் கடந்து இயங்கும் ஒரு ஆற்றலும், அர்ப்பணிப்பும் கொண்ட தலைவர் தேவை. காந்தியைப் போன்ற தலைவரா, அதெல்லாம் சாத்தியமில்லை என்று காந்தியை வியந்தோதி கொண்டாடுவதில் பொருளில்லை. கடவுளின் சாம்ராஜ்யம் உங்களிடத்தேதான் உள்ளது என்று தால்ஸ்தோய் சொன்னது போல காந்தியும் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கிறார். அந்த அடிப்படையில் ராகுல் இன்றைய காந்தியாக பணியாற்றவும் தேவையும், வாய்ப்பும் அதிகம் இருக்கிறது.

ராகுலின் பாதை எது, காந்தியின் பாதையா, நேருவின் பாதையா என்பது அடுத்த ஆண்டு தெரிந்துவிடும். ●

# வாக்குவாதத்தில் தள்ளுப்பாடு விழுந்தவர் வாகனமேறி மரணம்!

கொழும்பு, ஒக். 06

குருநாகல் - தம்புள்ளை பிரதான வீதிக்கு அருகில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது அவர்களில் ஒருவர் திடீரென வீதியில் தள்ளப்பட்டதில் அந்த நபர் வீதியில் பயணித்த கொள்கலன் வாகனத்தின் அடியில் விழுந்து நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று தொரட்டியாவ பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல் - தம்புள்ளை பிரதான வீதியின் கிரிவவுல பிரதேசத்தில் நேற்று மாலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தகராறு செய்த மற்றொரு நபர் உடனடியாக தப்பியோடினார், அவரைக் கண்டுபிடிக்க பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

